விலை ரூபா: 15.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

பக்கங்கள்: பன்னிரண்டு — Valampurii

சங்கு 10 வள்ளுவர் ஆண்டு 2040 சித்திரை 23 புதன்கிழமை (06.05.2009) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 138

SATS-TECH ENGINEERS



NEW PACKAGES & RENEWAL
CALL:- 222 5908 / 222 8812

# வன்னி நிலைமைகள் தொடர்பாக ஐ.நா. பாதுகாப்புச் சபை ஆராயும்

## ரஷ்யா தெரிவிப்பு

(நியூயோர்க்)

வன்னியில் உருவாகியிருக்கும் மனிதாபிமானப் பிரச்சினைகள் தொடர்பாக ஐ.நாவின் பாதுகாப்புச் சபையில் தொடர்ந்தும் அதிகார பூர்வமற்ற வகையில் ஆராயப்பட்டு, ஊடகங்களுக்கும் அது தொடர்பான செய்திகள் வெளியிடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது. இந்தக் கூட்டங்களில் ஐ.நா. சபைக்கான இலங்கையின் தூது வரும் கலந்து கொள்வார் என ஐ.நா. பாதுகாப்புச் சபையின் மே மாதத்துக்கான தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டிருக்கும் ஐ.நாவுக்கான ரஷ்யாவின் தூதுவர் விற்றாலி சுர்கின் தெரிவித்திருக்கின்றார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

### அதிபர் சேவை தரம் 2 -II பதவிப் போட்டிப் பரீட்சை

## 155 புள்ளிகளைப் பெறாதவர்களின் நியமனங்கள் இரத்தாகும் அபாயம்

(கொழும்பு)

அதிபர் சேவை தரம் 2- II பதவிக்கென நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையில் 155 புள்ளிகளுக்கு குறைவாக எடுத்து அதிபர் தரத்துக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்களின் நியமனங்கள் இரத்துச் செய்யக் கூடிய வாய்ப்புக்கள் இருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க இணைப்பாளர் சரவணபவன் தெரிவித்தார்,

இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்கு இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட எழுத்துப் பரீட்சை வெட்டுப் புள்ளியை 155 ஆகக் கொண்டு நியமனம் வழங்குமாறு உயர் நீதிமன்றம் (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஆக்ரோஷமான தாக்குதலை அரசாங்கம் நிறுத்த வேண்டும்

### ராகுல்காந்தி வேண்டுகோள்

(புதுடில்லி)

போர்ப் பகுதியில் இலங்கை அரசு மேற்கொள்ளும் ஆக்ரோஷமான நடவடிக்கையை தாங்கள் கடுமையாக எதிர்ப்பதாக இந்திய காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப் பொன்றின் போது இக்கருத்தினை அவர் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், விடுதலைப் (12ஆம் பக்கம் பார்க்க)

## புத்தளவில் நேற்று கிளைமோர்த் தாக்குதல்

(கொழும்பு)

தென்பகுதியில் உள்ள புத்தளவில் நேற்றுக் காலை உழவூர்தியை இலக்கு வைத்து நடத்தப்பட்ட கிளைமோர் தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். பெலவத்தை சீனிக் கூட்டுத்தாபனத்துக்குச் சொந்தமான உழவூர்தியே தாக்குதலுக்கு உள்ளானதாகத் தெரிவிக்கப்படுகின்றது. நேற்று செவ்வாய்க் கிழமை (12ஆம் பக்கம் பார்க்க)

## அவசரகாலச் சட்டம் மேலும் நீடிப்பு

(கொழும்பு)

அவசரகாலச் சட்டம் 74 வாக்குகளால் மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு நாடாளுமன்றம் கூடியது.

வழமையான சபைப் பணிகள் முடிபடைந்ததும் குறித்த (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாகரன் வெளியேறாதவாறு அரசாங்கம் கடும் நடவடிக்கை

### பிரதமர் சபையில் உரை

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நாட்டை விட்டு எங்கும் செல்லவில்லை. அவர் சிக்கியுள்ள பிரதேசத்திலிருந்து வெளியேற முடியாதளவுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதமர் ரட்ண சிறி விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

எங்கள் வீட்டு வேலையை எங்களால் செய்து கொள்ள (12ஆம் பக்கம் பார்க்க)

## தினுஷிகா கொலைச் சந்தேக நபர்கள் மூவர் பொலிஸாரால் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய பாடசாலை மாணவி தினுஷிகாவின் படுகொலை தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தவர்களில் மூவர் நேற்று அதிகாலை பொலிஸாரினால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பில் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இம் மாணவி கடத்தப்பட்டு, கப்பம் கோரப்பட்டு பின்னர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைதாகி பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டவர்கள் கல்வியங்காடு (பாரதி ஒழுங்கை) (12ஆம் பக்கம் பார்க்க)

## பிரித்தானிய எம்.பிக்கள் குழு ஜனாதிபதியுடன் விரிவான பேச்சு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள பிரித்தானிய நாடாளுமன்ற குழுவினர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளனர். அலரி மாளிகையில் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

இதன்போது இடம்பெயர்ந்த மக்களுக்கான மனிதாபிமானப் பணிகள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

'புலிகளிடமிருந்து மீட்கப்பட்டுள்ள சிவிலியன்களுக்காக தம்மால் வழங்க முடியுமான உதவிகள் குறித்து பிரித்தானிய எம்.பிக்கள் குழு ஜனாதிபதியிடம் (12ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதியுடனான சந்திப்பை த.தே.கூ. புறக்கணித்தது!

(கொழும்பு)

இலங்கையின் வடக்கில் போர் காரணமாக இடம்பெயர்ந்த நிலையில் வவுனியா உள்ளிட்ட பிரதேசங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளவர்களின் நலன்கள் தொடர்பாக விவாதிப்பதற்காக ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவினால் நேற்று கூட்டப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளின் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பங்கு பற்றாது புறக்கணித்துள்ளனர்.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற (12 ஆம் பக்கம் பார்க்க)

## மனிதாபிமான உதவிகள் மக்களை வந்தடைய சர்வதேச சமூகம் ஆதரவு வழங்க வேண்டும்

### விடுதலைப் புலிகள் கோரிக்கை

வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதி மக்களுக்கான அத்தியாவசிய உணவு மற்றும் மருந்துப் பொருட்களுக்கான விநியோகத்தை அரசாங்கம் தடை செய்திருப்பதால், அவர்களுக்கு புலம்பெயர்ந்த தமிழர்களால் அனுப்பப்படும் மனிதாபிமான உதவிகள் சென்றடைவதற்கான ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குமாறு விடுதலைப் புலிகள் அனைத்துலக சமூகத்தைக் கேட்டுள்ளனர்.

இது தொடர்பாக நேற்று விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தினால் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. (12ஆம் பக்கம் பார்க்க)

"கெட்டிமேளம் திருமண சேவை"
உங்கள் பிள்ளைகளின் திருமணங்களை
விரைவாகவும் விரும்பியபடியும் செய்துகொள்ள
மூர்த்தி லேசர் டிஜிற்றல் கலர் லாப்
62/17, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். E-MAIL: moorthydigital@gmail.com

# சிதம்பரத்தின் மீது மரக்கட்டை வீச்சு; தமிழக இளைஞன் பொலிஸாரால் கைது



(சென்னை)

தமிழகம் காரைக்குடி அருகே உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கலந்து கொண்ட கூட்டத்தில் பேசிக் கொண்டிருந்தபோது, அங்கிருந்த வாலிபர் ஒருவர் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை வாழ்த்திக் கோஷமிட்டபடி மரக்கட்டையை தூக்கி எறிந்தார்.

இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதனையடுத்து அவ்விளைஞரை உடனடியாக மத்திய பொலிஸார் அங்கிருந்து அழைத்து சென்றனர். சிவகங்கை தொகுதியில் மீண்டும் போட்டியிடும் ப.சிதம்பரம் பிரசாரத்தைத் தொடங்கினார்.

காரைக்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் அவர் கூட்டங்களில் கலந்து கொண்டு வருகிறார்.

காரைக்குடி அருகே சிவகங்கை மாவட்ட காங்கிரஸ் மகளிர் அணி மாநாடு நடைபெற்றது. இதில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் கலந்து கொண்டு பேசினார்.

அப்போது பெரியார் நகரைச் சேர்ந்த சாயல்ராம் என்கிற ராமு (வயது 35) திடீரென எழுந்து, இலங்கை பிரச்சினைக்கு முடிவு என்ன? இலங்கை தமிழர்களுக்கு பதில் சொல் என கோஷமிட்டார்.

மேலும், உலகத் தமிழர்களின் தலைவன் விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் வாழ்க எனவும் கோஷமிட்டார். அத்தோடு நில்லாமல் சிதம்பரத்தை நோக்கி மரக்கட்டை ஒன்றையும் வீசினார். எனினும் அம் மரக் கட்டை சிதம்பரத்தின் மீது படவில்லை.

இதை எதிர்பாராத பொலிஸார் மற்றும் கட்சி நிர்வாகிகள் அதிர்ச்சி அடைந்தனர். உடனடியாக சாயல்ராமை வளைத்துப் பிடித்து பொலிஸ் நிலையம் அழைத்து சென்றனர். காரைக்குடி வடக்கு பொலிஸார் சாயல் ராம் மீது வழக்குப் பதிவு செய்துள்ளனர்.

அவரை மன்னித்து விட்டுவிடும்படி ப.சிதம்பரம் பொலிஸாரை கேட்டுக் கொண்டுள்ளார். இருப்பினும் பிடிபட்ட நபரிடம் பொலிஸார் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

அண்மையில் சிதம்பரம் மீது இவ்வாறு பாதணி வீசிய நபரை விடுவிக்குமாறும் அவர் கோரினார். பொலிஸ் நிலையத்துக்கு அவரை அழைத்து சென்ற போது அங்கு சென்ற சிதம்பரத்தின் மகன் கார்த்தி முன்னிலையில் அவர் மீது கடுமையான தாக்குதல் மேற்கொள்ளப்பட்ட பின்னர் விசாரணைகள் எதுவுமின்றி அவர் விடுவிக்கப்பட்டிருந்ததாக செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில், தற்போது இவரை விடுவிக்குமாறு சிதம்பரம் கூறியுள்ள போதும் பொலிஸ் நிலையத்தில் அவருக்கு கடுமையான தண்டனை கிடைக்கலாம் என தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச-5)

# இளம் குடும்பஸ்தர் குத்திக்கொலை

(யாழ்ப்பாணம்)

வாய்த் தகராற்றினையடுத்து ஏற்பட்ட மோதலின் போது இளம் குடும்பஸ்தர் ஒருவர் கத்தியால் குத்தி கொலை செய்யப்பட்டுள்ளார். இச் சம்பவம் நேற்று இணுவில் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதன்போது இணுவில் காரைக்கால் வீதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான இரத்தினம் மணிவண்ணன் (வயது 35) என்பவரே உயிரிழந்தவராவார்.

இச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது, பிரஸ்தாப நபர் வீட்டில் இல்லாத சமயம் மூவர் அடங்கிய குழுவொன்று அவ் வீட்டில் இருந்தவர்களை தாக்கியுள்ளனர்.

அச்சமயம் பிரஸ்தாப நபர் வீட்டிற்கு வந்த போது குறிப்பிட்ட குழுவினர் அவரைக் கத்தியால் குத்தியதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்த அவர், யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இக் கொலைச் சம்பவம் தொடர்பான சந்தேக நபர்கள் தலைமறைவாகியுள்ளதாகவும் இது குறித்து கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-7)

# சாரதி அனுமதிப்பத்திர செயன்முறைப் பரீட்சை

சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்காக வீதி ஒழுங்கு விதிகள் சம்பந்தமான எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்து செயன்முறைப் பரீட்சைக்கு தோற்றாதவர்களும், செயன்முறைப்பரீட்சையில் சித்தியடையாதவர்களும் எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன்னர் செயன்முறைப் பரீட்சைக்கு தோற்றுமாறு யாழ்.மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள உதவி ஆணையாளர் வ.பத்மநாதன் அறிவித்துள்ளார்.

செயன்முறைப் பரீட்சையில் சித்தியடையாதவர்கள் நாளை மறுதினம் 8ஆம் திகதிக்கு முன்னர் மீள் செயன்முறைப் பரீட்சைக் கட்டணமாக 600 ரூபாயை செலுத்தி செயன்முறைப் பரீட்சைக்கான திகதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

புதிய நடைமுறையின் கீழ் சாரதி அனுமதிப்பத்திரம் (Smart Card) பெறுவதற்கு விண்ணப்பிக்கும் மூக்குக் கண்ணாடி பயன்படுத்தும் விண்ணப்பதாரிகள் மூக்குக் கண்ணாடி அணியாது எடுக்கப்பட்ட கறுப்பு வெள்ளை நிறத்திலான புகைப்படங்களை உரிய ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும் என்பதைக் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள்.

விண்ணப்பப் படிவங்கள் கறுப்பு நிற மையினால் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பமிடப்பட வேண்டும். வேறு நிற மையினால் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்பமிடப்படும் விண்ணப்பப் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

மேலும் புதிய நடைமுறையின் கீழ் சாரதி அனுமதிப் பத்திரச் செயற்பாடுகள் மாவட்ட மோட்டார் போக்குவரத்து திணைக்களத்திற்கு மாற்றப்பட்டுள்ளதால் புதிய சாரதி அனுமதிப்பத்திர விண்ணப்பப்படிவங்களை கையேற்பது வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய கிழமைகளிலும் சாரதி அனுமதிப் பத்திரம் புதுப்பித்தல், இணைப்பிரதிக்கு விண்ணப்பித்தல் தொடர்பான செயற்பாடுகள் செவ்வாய், வெள்ளி ஆகிய கிழமைகளிலும் பிற்பகல் ஒரு மணி வரை நடைபெறும் என்பதை தயவுடன் அறியத்தருகிறேன் என அவர் தெரிவித்துள்ளார். (ச-5)

# செயற்கை பிரளய இயந்திரம் மீள செயற்படுவதற்கு தயார்

## விஞ்ஞானிகள் அறிவிப்பு

(ஜெனிவா)

செயற்கையாக உலகப் பிரளயத்தை உருவாக்கும் முயற்சியில் நிர்மாணிக்கப்பட்ட இயந்திரத் தொகுதியானது திருத்தப்பட்டு செயற்படுத்தப்பட தயாராகி விட்டதாக விஞ்ஞானிகள் அறிவித்துள்ளனர்.

சுவிஸ்-பிரான்ஸ் எல்லையில் 16 மைல் நீளமான சுரங்கப் பாதையில் அமைக்கப்பட்டுள்ள இந்த இயந்திரத் தொகுதியானது கடந்த வருடம் செப்ரம்பர் மாதம் முதன் முதலாக இயக்கப்பட்டது.

எனினும் இயக்கப்பட்டு 10 தினங்களில் மின்சார விநியோகத்தில் இடம்பெற்ற தவறால் திரள் ஹீலியம் மூலகக் கசிவு ஏற்பட்டது.

இதனையடுத்து மேற்படி இயந்திரத் தொகுதியின் செயற்பாடுகள் இடைநிறுத்தப்பட்டன.

இந்த செயற்கை பிரளய பரிசோதனையானது, உயிரினங்களின் தோற்றத்துக்கான மர்மத்தை கண்டறிவதை இலக்காகக் கொண்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-5)

# புலமைப்பரிசில் பரீட்சை -1 மே 9இல் நடைபெறும்

## யாழ்.கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சைத் தொடரில் பரீட்சை -1 எதிர்வரும் 9ம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்.வலயப் பாடசாலைகளில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய்க் கோட்டப் பாடசாலை அதிபர்கள் உரிய கோட்டக் கல்வி அலுவலகங்களில் தமது பாடசாலைக்குரிய வினாப் பொதிகளைப் பெற்றுக் கொள்வதுடன் மாதிரிப்பரீட்சையை உரிய முறையில் நடத்தி புள்ளிப் பகுப்பாய்வு அறிக்கைகளை மாகாணக் கல்வித் திணைக்களத்துக்கும் வலயக் கல்வி அலுவலகத்தின் ஆரம்ப கல்வி பிரிவுக்கும் அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ச)

# இடம் பெயர்ந்த மக்களை பாதுகாக்க 50 மில்லியன் டொலர் நிதியுதவி தேவை

## சர்வதேசத்திடம் அரசாங்கம் கோரிக்கை

வட பகுதியில் இடம்பெயர்ந்திருக்கும் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கான போசாக்கு, சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய மனிதநேயத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி தேவையென இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஐ.நா. முகவர் நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கூடியிருந்தனர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இக்கோரிக்கையை முன்வைத்தார்.

இலங்கையின் வடபகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள முகாம்களில் தங்கியிருக்கும் 2 இலட்சத் துக்கும் அதிகமான மக்களுக்கு நன்மை ஏற்படும் நோக்கிலேயே இந்த உதவித் தொகையைக் கோருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது. அரசாங்கத்தின் இந்தக் கோரிக்கைக்கு உதவி வழங்கும் சமூகத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்குமென எதிர்பார்ப்பதாக மனித உரிமைகள் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டிருக்கும் வேலைத்திட்டத்துக்கு அமையவே இந்த நிதியுதவிகள் இடம் பெயர்ந்த மக்களுக்கு பயன்படுத்தப்படும் என அவர் கூறினார். (ச-5)

# உயிருக்கு அஞ்சி சரணடைவோரை தனியார் வாகனங்களில் கொண்டு செல்லப் பணிப்பு

யாழ்ப்பாணத்தில் உயிருக்கு அஞ்சி மனித உரிமைகள் ஆணைக்குழுவில் சரணடைவோரை இனிவரும் காலத்தில் மனித உரிமைகள் ஆணைக்குழு வாகனங்களில் அல்லாமல் தனியார் வாகனங்களில் அழைத்துச் சென்று நீதிமன்றில் ஆஜர் செய்யுமாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் ஆணைக் குழுவின் கொழும்பு தலைமையக செயலாளர் சந்திரா எல்லாவல இந்தப் பணிப்புரையை விடுத் துள்ளார்.

இதேவேளை உயிருக்கு அஞ்சி சரணடைவோரை யாழ்ப்பாண மேலதிக நீதவான் நீதிமன்றத்தில் மாத்திரமல்லாமல் ஏனைய ஐந்து நீதவான் நீதிமன்றங் களினூடாகவும் ஆஜர் செய்வதற்கு இணங் கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் யாழ்ப்பாணம், மல்லாகம், பருத்தித்துறை, சாவகச்சேரி மற்றும் ஊர்காவற்றுறை ஆகிய இடங்களில் உள்ள நீதவான் நீதிமன்றங்களில் அவர்களை ஆஜர் செய்யுமாறு யாழ்ப்பாண இராணுவ கட்டளை அதிகாரியும், மேலதிக நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவும் இணங்கியுள்ளார்கள்.

இதற்கிடையில் இவ்வாறு ஆஜர் செய்யப்படுபவர்கள் படையினரால் நடத்தப்பட்டு வரும் தெல்லிப்பழை புனர்வாழ்வு முகாமினூடாக ஆஜர் செய்யப்படுவதற்கும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இதேவேளை வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து பின்னர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருந்த பல இளைஞர்கள் அங்கிருந்து தப்பிசென்றதாக வெளியான தகவலை அடுத்து படையினர் இவ்வாறானவர்களை சரணடையுமாறு ஒலிபெருக்கிகளின் மூலம் அறிவித்தல் விடுத்து வருகின்றனர். (ச-5)


**விற்பனைக்கு**

சிடி,டிவிடி,வீடியோ கசட் மற்றும் வீடியோ கடைக்குத் தேவையான அனைத்து பொருட்களும் விற்பனைக்கு உள்ளது.

**விஜி வீடியோ**

இல. 1711 ,கடற்கரை வீதி,குருநகர்,யாழ்ப்பாணம். (2599)

**சேவை முகவர்**

வீடுகள்,காணிகள் விற்பனைக்கு உண்டு. நல்லூர், யாழ்ப்பாணம் பகுதிகளில் விற்க விரும்புவோரும் தொடர்பு கொள்ளலாம்.

தரகர் தேவை இல்லை.

தொடர்பு:சுந்தரம்

தொடர்பு நேரம்: பகல் 1 மணி - 3 மணி

T.P:021 222 9177 (2704)

# இன்று ஒரு தகவல்

## காலம் போற்றும் கதிர்கள்

ஆய்வுகூடமொன்றில் ஒருவர் ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். ஒருநாள், 20 மணித்தியாலங்கள் அவர் அங்கேயே உட்கார்ந்திருந்தார்.

மனைவி சென்று அவரை அழைக்கிறார். அதுகூட அவருடைய காதில் விழவில்லை. என்ன ஆயிற்று அவருக்கு?

1895 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 8 ஆம் திகதி அந்த ஆய்வு கூடத்தில் அவர் மட்டும் தான் இருக்கிறார்.

உதவியாளர்களெல்லாம் வீட்டுக்குப் போய்விட்டார்கள். ஒரு வெற்றிடக் கண்ணாடிக் குழாயில் மின்சாரத்தைச் செலுத்தி ஆராய்ச்சி செய்து கொண்டிருந்தார். அக் குழாயில் கறுப்புத்தாளை சுற்றியிருந்தார். வெளிச்சம் வெளியில் வராமல் இருக்க அறையில் இருந்த விளக்குகளையெல்லாம் அணைத்து விட்டார். இப்பொழுது அந்த வெற்றிடக் குழாய்க்குள் மின்சாரத்தை செலுத்தினார்.

வெளிச்சத் தடுப்புக்காக சுற்றியிருந்த கறுப்புத்தாள் தானாக ஒளிவிட ஆரம்பித்தது.

பேரியம் பிளாட்டினோ சயனேட் எனும் இரசாயனம் தோய்க்கப்பட்ட தாள் அது. ஒளிக்கற்றையில் புலனாகாத கதிர்களைக் காட்டக் கூடியது அந்த இரசாயனம்.

கறுப்புத் தாளால் மூடப்பட்ட குழாயிலிருந்து புலனாகாத மர்மக் கதிர்கள் வெளியே வருகிறது என்பது புரிந்தது. உலகத்துக்கு ஒரு மகத்தான கண்டு பிடிப்பு கிடைத்தது அதுதான் எக்ஸ்ரே!

கண்டுபிடித்தவர் – ஜெர்மனிய விஞ்ஞானியான வில்ஹெம் கான்ராட் ராண்ட்ஜன்

அந்தக் கதிர்களின் தன்மைகளை ஆராய்ச்சி செய்தார். பிளாட்டினம் ஈயம் தவிர்ந்த ஏனைய பொருட்களை இக்கதிர் ஊடுருவி செல்லக்கூடியது என்பது புரிந்தது.

இந்தக் கதிரை தனது கையில் ஊடுருவச் செய்து அதை ஒரு புகைப்பட தகட்டில் பதிவு செய்தார். கை எலும்புகள் துல்லியமாகத் தெரிந்தது.

மனைவியின் கைகளை எக்ஸ்ரே கதிர்கள் மூலமாக படம் எடுத்தார். மனைவியின் கை எலும்புகளுடன் திருமண மோதிரமும் அதில் தெரிந்தது.

மருத்துவ உலகிலும் தொழில் துறையிலும் இந்த கண்டுபிடிப்பு ஒரு பெரும் புரட்சியை ஏற்படுத்தியது.

ஜெர்மனிய பேரரசர் கெய்சர் முன்னிலையில் ராண்ட்ஜன் எக்ஸ்ரேயை இயக்கிக் காட்டினார்.

அந்த மன்னருக்கு இடது தோளில் ஒரே வலி. அதைப் படம் எடுத்துக் காட்டினார். நோய் என்ன வென்பது புரிந்தது. சிகிச்சையும் சுலபமானது.

எக்ஸ்ரே கண்டுபிடித்தபொழுது மக்களுக்கு ஒரு பக்கம் வியப்பு... மறுபக்கம் பயம். ஆடைகளை ஊடுருவிப் பார்க்கக் கூடிய கண்டுபிடிப்பு என்று செய்திகள் பரவ ஆரம்பித்தது. அதனால் எல்லோரும் வெளியில் நடமாடவே பயந்தார்கள்.

சில துணி வியாபாரக் கம்பனிகள் விளம்பரம் கொடுத்தார்களாம்:

"எங்கள் கம்பனி உள்ளாடைகள் பாதுகாப்பானவை. எக்ஸ்ரே கதிர்களால் துளைக்க முடியாதபடி உருவாக்கப்பட்டுள்ளன" என்று.

வதந்திகள் மக்களை ரொம்பவே குழப்பி விட்டன. அது இருக்கட்டும். இப்பொழுது எக்ஸ்ரே எதற்கெல்லாம் உபயோகப்படுகிறது தெரியுமா?

ஒரு இளைஞன் டாக்டரிடம் போனான்.

"டாக்டர், உங்களோடு படித்த வெங்கட்ராமனுடைய மகன் நான். அப்பா தான் உங்களிடம் அனுப்பினார். எனக்கு நெஞ்சுவலி" என்றான்.

"அப்படியா? அப்பா எப்படியிருக்கிறார்? நீ போய் ஒரு எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு நாளைக்கு வா" என்றார்.

இவன் போய் எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு மறுநாள் போனான். டாக்டர் பார்த்தார். அவருக்கு ஞாபகம் வரவில்லை. பேசாமல் இருந்து விட்டார்.

"டாக்டர், நேற்று வந்தேனே நீங்கள் தானே எக்ஸ்ரே எடுத்துக் கொண்டு வரச் சொன்னீர்கள்" என்றான்.

"அப்படியா சொன்னேன். சரி படத்தைக் கொடு பார்க்கலாம்" என்று வாங்கிப் பார்த்தார். எலும்புக்கூடு தெளிவாகத் தெரிந்தது. அதன் பின்னர் தான் அவருக்கு ஞாபகம் வந்தது.

"அடடே நீ வெங்கட்ராமன் பிள்ளையாடா... வா... வந்து உட்கார்" என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நலன்புரி நிலையங்களில் சுயமாக சமைக்கும் நடைமுறை 03 நாட்களுக்குள் ஆரம்பமாகும்

## 80 குடும்பங்களுக்கு ஒரு சமையலறை வீதம் அமைக்க ஏற்பாடு

இடம்பெயர்ந்து வவுனியாவிலுள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்களுக்கு சமைத்த உணவு வழங்கும் நடைமுறை நிறுத்தப்பட்டு, அகதிகளே சுயமாக சமைத்து உண்ணும் நடைமுறை இன்னும் சில தினங்களுக்குள் ஆரம்பிக்கப்படும் என்று அனர்த்த நிவாரணம் மற்றும் மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் யூ.எல்.எம். ஹலால்டீன் தெரிவித்தார்.

வவுனியா இராமநாதன் நிவாரணக் கிராமத்தில் உள்ள 14 ஆயிரத்து 974 குடும்பங்களும் சுயமாக சமைத்து உண்ணும் நடைமுறை இன்னும் 03 தினங்களுக்குள் ஆரம்பிக்கப்பட்டதும் இத்திட்டம் முழுமையாக அமுலுக்கு வரும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

மோதல் காரணமாக இடம்பெயர்ந்து நலன்புரி கிராமங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகள் தாமாகவே உணவினை சமைத்து சாப்பிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுதல் தொடர்பாக வவுனியா கச்சேரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலில் விரிவாக ஆராயப்பட்டது. இந்நடவடிக்கை தொடர்பாக மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் ஹலால்டீன் மேலும் விபரிக்கையில்,

நலன்புரிநிலையங்களில் உள்ள அகதிகளுக்கு 03 தினங்களுக்கு மட்டுமே சமைத்த உணவுகளை வழங்க முடியும் என்பது சட்ட விதியாகும். இருந்தபோதும் நீண்ட நாட்களாக அகதிகளுக்கு அரசாங்கம் சமைத்த உணவை வழங்கி வருகின்றது. எனவே அவ்வாறு உணவு வழங்குவதை நிறுத்தி சுயமாக சமைத்து உண்ணும் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பில் அரசாங்கம் கூடிய கவனம் செலுத்தியுள்ளது.

அந்த வகையில் வவுனியா கதிர்காமர், ஆனந்தகுமாரசுவாமி போன்ற நிவாரணக் கிராமங்களிலுள்ள மக்கள் ஏற்கனவே சுயமாக சமைக்கத் தொடங்கி விட்டனர். இந்நிலையில் அண்மைக் காலத்தில் இடம்பெயர்ந்து வந்து இராமநாதன் நிவாரணக் கிராமத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள 14 ஆயிரத்து 974 குடும்பங்களைச் சேர்ந்த 52 ஆயிரம் பேருக்கு இவ்வசதி இன்னும் 03 தினங்களுக்குள் செய்து கொடுக்கப்படும். இதன்படி சுயமாக சமைத்து உண்ணும் நடைமுறை அனைத்து கிராமங்களிலும் நடைமுறைக்கு வருகின்றது. இராமநாதன் நலன்புரி கிராமத்தில் பொது சமையலறைகள் அமைத்துக் கொடுக்கப்படும்.

80 குடும்பங்களுக்கு ஒரு சமையலறை என்ற அடிப்படையில் ஒதுக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அந்த சமையலறைகளுக்குத் தேவையான உபகரணங்கள் அரசாங்கத்தினால் வழங்கப்படும். அவர்களுக்கு சமையலுக்குத் தேவையான அரிசி, மா போன்ற அத்தியாவசியப் பொருட்கள் உலக உணவுத் திட்டத்தின் ஊடாக பெற்றுக் கொடுக்கப்படும்.

எனவே, சமைத்த உணவுப் பொருட்களை நிவாரண உதவியாக பெற்றுக் கொள்வதை நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நிவாரண உதவி வழங்க விரும்புவோர் அரிசி, மா, காய்கறி, கருவாடு மற்றும் சமையலுக்கு அவசியமான அத்தியாவசியப் பொருட்களையே வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர் என்று கூறினார். (ஓ-6)



அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தினரால் புனரமைக்கப்பட்ட சரசாலை அந்திராய்க் குள கையளிப்பு நிகழ்வில் சாவகச்சேரி மக்கள் வங்கி முகாமையாளர் க. சண்முகலிங்கம் மங்களவிளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதனையும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் க. கணேஸ், "கிறிஸ்டியன் எயிட்" நிறுவன முகாமையாளர் Miss. Tess Dico young, பிரதேச செயலாளர் செ. ஸ்ரீனிவாசன், பிரதேச சபை செயலாளர் சிவராஜலிங்கம் மற்றும் பிரமுகர்களையும் காணலாம்.

(படங்கள் :- சாவ. நிருபர்)

# இராசி பலன்

**06.05.2009**
(சித்திரை 23, புதன்கிழமை)
துவாதசி முற்பகல் 10.07 மணிவரை
அத்தம் முன்னிரவு 11.39 மணிவரை
இராகுகாலம் 11.56-1.26 மணிவரை
சுபநேரம் 4.26-5.56 மணிவரை
பிரதோச விரதம்
உமாபதி சிவாச்சாரியார் குருபூசை.

| | |
|---|---|
| மேடம் | சுகவாழ்வு, சுவாரஸ்யம், தடைப்பட்ட காரியம் கைகூடும், போசன சுகம். |
| இடபம் | தாழ்ந்த சுபாவம், காரிய இடையூறு, அஜீரண ரோகம், பணக்குறைவு. |
| மிதுனம் | ரோகபயம், தொழில் சிந்தை, தாய்வழி உறவு, வாகன சுகம். |
| கடகம் | வாக்குமேன்மை, அந்நியர் சந்திப்பு, முயற்சி கைகூடும், நற்கீர்த்தி. |
| சிங்கம் | அதிக செலவு, காரிய தாமதம், கௌரவக்குறைவு, ரோகநிலை. |
| கன்னி | சயனசுகம், வெகுமானம், மாதர் நட்பு, தெய்வ சிந்தை. |
| துலாம் | வீண் அலைச்சல், சுபசெலவு, கோபப்படுதல், போசன சுகம். |
| விருச்சிகம் | குடும்ப சுகம், பொருள் சேர்க்கை, இஷ்ட சித்தி, கலந்துரையாடல். |
| தனுசு | காரிய சித்தி, கௌரவமான நிலை, ஆரோக்கியம், அதிகாரம். |
| மகரம் | உத்தியோக பங்கம், எதிர்பாராத செலவு, ஆரோக்கியக்குறைவு, பிரயாணம். |
| கும்பம் | பொருள் விரயம், அஜீரணக் கோளாறு, எதிர்பாராத பகை, முயற்சி தாமதம். |
| மீனம் | மனோ தைரியம், காரிய அனுகூலம், கீர்த்தி, பொருள் சேர்க்கை. |

வளவன்

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 160 | 180 | 180 |
| உருளைக்கிழங்கு | 120-140 | 150 | 160 |
| பச்சைமிளகாய் | 50 | 50 | 50 |
| தக்காளி | 150 | 180 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 60 |
| கோவா | 20 | 40 | 35 |
| கரட் | 30 | 50 | 60 |
| பூசணி | 20 | 40 | 15-20 |
| புடோல் | -- | 50 | 50 |
| வாழைக்காய் | 60 | 70 | 60 |
| சின்ன வெங்காயம் | 35 | 40-50 | 40 |
| பெரிய வெங்காயம் | -- | 120 | -- |
| பாகற்காய் | 100 | 100 | 80 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 50 |
| கரணைக் கிழங்கு | 50 | 60 | 60 |
| பயிற்றங்காய் | 80 | 100 | 50 |
| லீக்ஸ் | -- | 140 | 160 |
| போஞ்சி | - | - | - |
| பிற்றூட் | 20 | 40 | 30 |
| கறிமிளகாய் | 80 | 100 | 80 |
| கீரை – 1 பிடி | 25 | 25 | 20 |
| தேசிக்காய் | 90 | 100 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35 | 15-32 |



'ஜீவநதி' கலை இலக்கிய சஞ்சிகையின் இரண்டாம் ஆண்டு நிறைவு மலர் வெளியீட்டு விழா கடந்த 25 ஆம் திகதி தேவரையாளி இந்துக் கல்லூரியில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் மூத்த எழுத்தாளர் கலாபூசணம் தெணியான், யாழ். கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன், யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இராஜேஸ்கண்ணன், விரிவுரையாளர் ஈ. குமரன் ஆகியோர் உரையாற்றுவதையும் இதழாசிரியர் கலாமணி பரணீதரன் ஏற்புரை வழங்குவதையும் கலந்து கொண்டோருள் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

## பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட உள்ளூராட்சி மன்ற விளையாட்டுக்கழகங்களுக்கிடையே நடாத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெற் சுற்றுப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ். மாநகரசபை விளையாட்டுக் கழக தலைவர் து. ராஜன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் யாழ். மாநகர சபை ஆணையாளர் மு.செ. சரவணபவ பிரதம பிரதம விருந்தினராகவும், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி ம. வசந்தகுமார் கௌரவ விருந்தினராகவும், நல்லூர் பிரதேச சபை செயலாளர் மே. யோ. சாந்தசீலன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். மாநகர சபை விளையாட்டுக் கழக நிர்வாக சபை அங்கத்தவர் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாநகர சபை செயலாளர் கேட்டுக் கொள்கின்றார். (ஓ-30)

## ஈஸ்வரம்மா தினவிழா

(யாழ்ப்பாணம்)

யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையத்தின் ஈஸ்வரம்மா தின விழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி மாலை 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் வேதபாராயணம், ஓம்காரம் அஷ்டோத்திரம், ஸ்லோகங்கள், பஜனைகள் இடம்பெறுவதுடன், "என்னுடைய விசுவாசமான பக்தனுக்குரியது" சிறப்பு நாடகமும், யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை முதுநிலை விரிவுரையாளர் திருமதி. நாச்சியார் செல்வநாயகத்தின் சிறப்பு சொற் பொழிவும் இடம்பெறவுள்ளது. (ஓ-4)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பூரணைத் தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் நல்லூர் ஸ்ரீ கைலாச பிள்ளையார் தேவஸ்தானத்தில் ஆலய பரிபாலகர்களின் அனுசரணையுடன் 9 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.30 மணியளவில் ஆலயப் பூசையைத் தொடர்ந்து நடைபெற்று வரும் முதலாந் திருமுறை முற்றோதலையடுத்து நடைபெறவுள்ளது. (ஓ)

## வீடமைப்புத்திட்டம்

(யாழ்ப்பாணம்)

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிற்கு நிகோட் திட்டத்தினால் புதிதாக வீடுகளை நிர்மாணித்து கொடுப்பதற்கு இதுவரை எந் நிதி மூலத்தினூடாகவும் வீடமைப்புத்திட்டத்தினை பெற்றுக் கொள்ளாத குடும்பங்களின் விபரம் கோரப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை பெற்றுக் கொள்ளும் பயனாளிகள் வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவராகவும் சொந்தக் காணி உடையவராகவும் மீளக்குடியமர்ந்த கொடுப்பனவு பெறாதவராகவும் வீடு போரினால் பாதிக்கப்பட்டும் இருத்தல் வேண்டும்.

இத்தகைய பயனாளிகள் இருப்பின் அவர்களின் விபரங்களை 10 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கும்படி பிரதேச செயலகங்களுக்கு அரச அதிபர் அறிவித்துள்ளார். (ஓ-30)

## ஆங்கிலபாட ஆசிரியர்களுக்கான பயிற்சி கொழும்பில் இம்மாதம் 11-29வரை

(யாழ்ப்பாணம்)

விரைவில் சமாதானத்தைக் கட்டியெழுப்பும் ஆரம்ப திட்டத்தின் கீழ் வடக்கு மாகாண பாடசாலைகளின் ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் கொழும்பில் இம்மாதம் 11 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்கு யாழ். மாவட்டப் பாடசாலைகளில் இருந்து 10 பேர் தெரிவாகியுள்ளனர். தெரிவாகியோரின் விபரம் வருமாறு,

செல்வி சதாகினி செல்வராஜா - வட இந்து மகளிர் கல்லூரி, பாலசுப்பிரமணியம் பிரசாத் - கொக்குவில் இந்துக்கல்லூரி, அரியரட்ணம் ஹரிஞானராஜன் - சென்ஜோன்ஸ் கல்லூரி, செல்வி. கேமலோஜினி தேவராஜன் - வேம்படி மகளிர் கல்லூரி, செல்வி. வசந்தி வைத்தியலிங்கம் - யூனியன் கல்லூரி, திருமதி. கலாவல்லி தர்மகுலசிங்கம் - யாழ். இந்து மகளிர் கல்லூரி, முருகேசு சேரலாதன் - இந்து ஆரம்ப பாடசாலை, செல்வி. நிகிதினி - செல்லக்கண்டு - யாழ். இந்துக்கல்லூரி, ஜெயசுதாசன் அனாஸ்லி மயூரேஸ் - சென் பற்றிக்ஸ் கல்லூரி, வைத்தியலிங்கம் உமாசுதன் - மகாஜனாக் கல்லூரி. (ஓ)




## பட்டதாரி ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சி

மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பட்டதாரி ஆசிரியர்களுக்கான சேவை முன் பயிற்சிக்கு பின்வரும் பட்டதாரி ஆசிரியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அப்பயிற்சியில் தவறாது உடனடியாக இணைந்து கொள்ளுமாறு மட்டக்களப்பு தேசிய கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கேட்டுள்ளார்.

இதற்கான அழைப்புக் கடிதத்தினை யாழ்ப்பாண தேசிய கல்வியியற் கல்லூரியில் பெற்றுக்கொள்ளலாம் என பீடாதிபதி எஸ். கே. யோகநாதன் தெரிவித்துள்ளார். தெரிவு செய்யப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களின் விபரம் வருமாறு,

எஸ். பிரபாகரன் - புவியியல் - யாழ்ப்பாணம், வி. சாருமதி - கணக்கியல்- புன்னாலைக்கட்டுவன், எஸ். யமுனா - கணக்கியல் - சுன்னாகம், செல்வி. வை. தயாளன் - விவசாயம், யாழ்ப்பாணம், எஸ். சிவஞானவதி - சிங்களம், கொக்குவில், ஆர். ஜயன் - தகவல் தொழில்நுட்பம் - கொக்குவில், கே. சுரேஷ்குமார் - வியாபாரகற்கை குப்பிளான், எஸ். முரளிகரன் - வியாபாரகற்கை - பருத்தித்துறை, ஆர். மேகலா - ஆங்கிலம் - யாழ்ப்பாணம், பி. சேயோன் - வியாபார கற்கை - சுன்னாகம், எல். சி. ஆனந்தா - விவசாயம் - ஆனைக்கோட்டை, கே. சுதாகரன் - வரலாறு - யாழ்ப்பாணம், ஆர். இராஜகோபால் - சிங்களம் - சங்கானை, வி. உதேஷ் - புவியியல், யாழ்ப்பாணம், ஜே. ஜெனிஸ்ரா - பொருளியல் - யாழ்ப்பாணம், ரி. இரவிச்சந்திரன் - அரசியல் விஞ்ஞானம் - மானிப்பாய், எம். ஜெயநாதன் - மனைப்பொருளியல் - புத்தூர், வி. குணசம்பந்தன் - தமிழ் - நெல்லியடி, இ. ஆர். பி. இராஜநாதன் - தகவல் தொழில்நுட்பம் - இளவாலை. (ஓ)

## தேசிய பாடசாலையில் ஆசிரிய நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

தேசிய பாடசாலையில் ஆசிரிய நியமனத்திற்கான நேர்முகப்பரீட்சைக்கு கடந்த 2009. 04.30 ஆம் திகதி கொழும்பு/ மேல்மாகாணத்திற்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் அதில் கூறப்பட்ட சான்றிதழ்கள், அழைப்புக்கடிதம் என்பவற்றின் பிரதிகளை கோவையிற் காட்டியபடி மூலச் சான்றிதழ்களுடன் இன்றும், நாளையும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனைக்கு சமூகமளிக்குமாறு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (ஓ)


## அல்வாய் சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் கோவில்

### மஹோற்சவம்

### 08 ஆம் நாள் வேட்டைத்திருவிழா (06.05.2009)

வெண்பா

சேருபகை ஓர்புறமும் செய்பாவமதும் சூழவிங்கு
சீரழிந்து சித்தச்செயலிழந்தேன்-பேறடைய
போகுவழி தெரியாது பித்தாகிப் புலம்புகிறேன்
ஆகுவழி காட்டையா அணைத்து

எண்சீர்

சோலைமிகு நிழலாகும் ஆலடியில்
சோபிதமாய் கோயிலுகும் சிந்தூரா
வேளையெது வேண்டுதலை தீர்த்தருள
வேழவிழிதான் மலந்திடும் காலமெதோ
பாமுலகை கலிமேவுங் கோலமிதோ
பாவச் சுமை தானிங்கு பெருகியதோ
நீழ்விழியா நிலமிசை வாழ்மாந்தர்
நீள்துயரந் தீர்த்தருள வாராயோ



-அல்வாயூர் சி.சிவநேசன்

(2566)


## பாடசாலை செல்லாத இடைவிலகிய மாணவர்களின் விபரம் திரட்டல்

யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகம் மற்றும் யுனிசெப் நிறுவனம் ஆகியவை இணைந்து யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட பிரதேசங்களை மையமாகக் கொண்டு பாடசாலை செல்லாத இடை விலகிய மாணவர்களின் விபரம் திரட்டும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

இதன் முதற் கட்டமாக கோப்பாய் பிரதேச செயலகங்களுக்குட்பட்ட கிராமங்களில் உள்ள பாடசாலை செல்லாத மாணவர்களின் விபரங்கள் திரட்டப்படவுள்ளன. (ஓ-7)

## மணவாளக் கோலம்

சங்கானை அரசடி ஞான வைரவப் பெருமான் ஆலய மணவாளக் கோல விழா இன்று புதன்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து 12 மணிக்கு பூஜை, திருவூஞ்சல் என்பனவும் இடம்பெறவுள்ளது. (ஓ-30)

## சேவைநலன் பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் 1987-05-15 முதல் 2009-04-24 வரை பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியராக அளப்பரிய கல்விப் பணியாற்றி ஓய்வு பெறும் திருமதி. ஸ்கந்தசோதி சாந்தராசாவின் சேவையைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை காலை 10.30 மணிக்கு வித்தியாலய அதிபர் வி. மாணிக்கம் தலைமையில் நடைபெறவுள்ளது (ஓ)

## கோப்சிற்றி திறப்புவிழா

(சாவகச்சேரி)

இன்று புதன்கிழமை காலை மட்டுவில் கமலாசினிக் கருகில் கோப்சிற்றி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கத்தினரால் மட்டுவில் 11 ஆம் கிளையில் ஆரம்பிக்கப்படும் இக்கோப்சிற்றியை யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் பொ. சிவலிங்கம் திறந்து வைக்கவுள்ளார். (ஓ-29)

## உடற்பயிற்சி போட்டி பிற்போடப்பட்டுள்ளது

(சாவகச்சேரி)

தென்மராட்சி பாடசாலைகளிடையே நாளை வியாழன் மட்டுவில் சந்திரபுர ஸ்கந்தவரோதய மகாவித்தியாலய மைதானத்தில் நடைபெற இருந்த உடற்பயிற்சிப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தால் 11 ஆம் திகதி திங்கள் அதே மைதானத்தில் நடைபெறவுள்ளதென வலயக் கல்விப் பணிப்பாளர் கு. பிறேமகாந்தன் அறிவித்துள்ளார். (ஓ-29)

## மானிய விலையில் கோழிக் குஞ்சுகள்

சாவகச்சேரி கால்நடை வைத்தியர் அலுவலகத்தில் இன்று புதன்கிழமை மானிய விலையில் கோழிக்குஞ்சு வழங்கவுள்ளதாக சாவகச்சேரி கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதன்பிரகாரம் இதுவரை 90 ரூபாவாக விற்கப்பட்ட குஞ்சுகள் 45 ரூபாவாக மானிய விலையில் வழங்கப்பட்டுள்ளதாகவும் சாவகச்சேரி பிரதேச எல்லைக்குட்பட்ட பண்ணையாளர்கள் இதனால் பெற்றுக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார். (ஓ-29)

# சாவகச்சேரி இந்துக் கல்லூரி

# க.பொ.த (சா/த) 2008 பெறுபேறுகள்

## ஒரு பார்வை

சாவகச்சேரி இந்துக்கல்லூரி யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நான்கு தேசிய பாடசாலைகளுள் ஒன்றாக இருப்பதுடன் இங்கு தான் ஆண், பெண் இருபாலரும் எல்லா வகுப்புகளிலும் கல்வி கற்கின்றனர். இது தென்மராட்சிப் பிரதேச வலயத்தின் முதன்மைக்கல்வி நிறுவனமாகும். இக்கல்லூரி கடந்த இரண்டு தசாப்தங்களாக கல்விச் செயற்பாட்டில் நல்ல முன்னேற்றம் கண்டு வருவதுடன் வருடாவருடம் சிறந்த பரீட்சைப் பெறுபேறுகளையும் பெற்றுவருகின்றது. 1980களின் பின்னர் வட பகுதியில் ஏற்பட்ட முடிவுறாத யுத்தத்தால் தென்மராட்சிப்பிரதேசம் பல பாதிப்புகளை எதிர்கொண்டு வருகின்றது. யுத்தத்தாலும் இடப்பெயர்வாலும் பாதிக்கப்பட்ட மக்கள் தென்மராட்சிக்கு வருகை தந்ததால் தென்மராட்சிப்பிரதேசமும் இந்துக்கல்லூரியும் பல தடவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.இந்திய அமைதிகாக்கும் படைகளின் நடவடிக்கைகளின் போதும் 1995இல் வலிகாமம் மக்கள் தென்மராட்சிக்கு இடம்பெயர்ந்த பொழுதும் தென்மராட்சியும் இந்துக்கல்லூரியும் பல பிரச்சினைகளை எதிர்கொண்டன. 1995/1996 காலப்பகுதியில் யாழ்ப்பாண மாவட்டச்செயலகம், உணவுக்களஞ்சியம், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் மற்றும் பல காரியாலயங்கள் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இயங்கின. இச் செயற்பாடுகளால் கல்லூரி வளம் பெரிதும் பாதிக்கப்பட்டது. பின்னர் 2000ஆம் ஆண்டு தென்மராட்சி யுத்தத்தினால் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மீண்டும் பாதிப்புக்குள்ளாகி பெரும் இழப்புகளைச் சந்திக்க நேர்ந்தது. இவ் யுத்தத்தின் பின்னர் தென்மராட்சி மக்கள் இடம்பெயர்ந்து அதில் குறிப்பாக தென்மராட்சி மேல்தட்டு மக்கள் ( Creany Layer) தென்மராட்சியில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு இடம் பெயரலாயினர். இதனால் இக் கல்லூரி மத்திய தர வகுப்புப்பிள்ளைகளையும் மீத்திறன் மாணவர்களையும் இழக்க நேர்ந்தது. சிறு காலத்திற்குப் பின்னர் சாவகச்சேரி மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கத் தொடங்கியது.

இக்கல்லூரி தற்போது 2009ஆம் ஆண்டு சித்திரை மாதத்தில் இருந்து வன்னியில் இருந்து யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிகமாக வாழும் நலன்புரி நிலையமாக இயங்கி வருகின்றது. இதனால் தற்போது இக் கல்லூரி மாணவர்கள் தற்காலிக ஏற்பாடுகளுக்கேற்ப பல இடங்களில் கல்வி கற்கின்றனர். சிறிது காலத்திற்குள் கல்லூரியின் கல்விச் செயற்பாடுகள் மீண்டும் கல்லூரி வளாகத்தில் நடைபெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது. காலத்திற்குக் காலம் பல இடர்கள் சோதனைகளால் கல்லூரியின் வழமையான செயற்பாடுகள் பல பிரச்சினைகளை எதிர்கொண்ட பொழுதும் அர்ப் பணிப்பு மிக்க அதிபர்களின் முயற்சிகளாலும் சிறந்த இடர் முகாமைத்துவத்தாலும் பொதுமக்களின் ஒத்துழைப்பாலும் இக் கல்லூரி தனது முதன்மை நிலையை தக்க வைத்துள்ளது.

2008ஆம் ஆண்டு கல்லூரியில் இருந்து க.பொ.த. (சா/த) பரீட்சைக்கு 175பேர் விண்ணப்பித்து 174 பேர் பரீட்சைக்குத் தோற்றினர். இவர்களுள் 162 பேர் (93.1%) க.பொ.த.(உ/த) கற்கத் தகுதி பெற்றுள்ளனர். இதில் 107பேர் (61.5%) விஞ்ஞானப் பிரிவுக்கும் 107பேர் (62.6 %) வர்த்தகப் பிரிவுக்கும் 162 பேர் (93.1%) கலைத்துறைக்கும் தகுதி பெற்றுள்ளனர். 163பேர் 6 பாடங்களில் சித்தி பெற்றுள்ளனர். A சித்தி அடிப்படையில் பரீட்சைப் பெறுபேறுகள் பின்வருமாறு ,

149பேர் ஒரு Aக்கு மேலும் 33பேர் 5 Aக்கு மேலும் பெற்றுள்ளனர். 25 பேர் ஒரு A சித்தியும் பெறவில்லை.

சித்தியடையாதவர்களின் பெறுபேறுகளைநோக்கின் அட்டவணை II இல் காட்டப்படுகின்றது. 64 பரீட்சார்த்திகள் எல்லாப்பாடத்திலும் சித்தி பெற்றுள்ளனர். 74 பரீட்சார்த்திகள் முறையே ஒரு பாடத்தில் சித்தியடைய முடியவில்லை. 18 பேர் இரண்டு பாடத்திலும் 8 பேர் மூன்று பாடத்திலும் 8பேர் 4 பாடத்திலும் இருவர் ஐந்து பாடத்தி லும் சித்தி பெறவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அட்டவணைI

| தரம் | எண். |
|---|---|
| 9A | 04 |
| 8A | 03 |
| 7A | 05 |
| 6A | 06 |
| 5A | 15 |
| 4A | 18 |
| 3A | 19 |
| 2A | 25 |
| 1A | 54 |
| 0A | 25 |

அட்டவணை IVஇல் பாட அலகுகளின் பெறு பேறுகள் தர அடிப்படையிலும் எண்ணிக்கையிலும் விகிதத்திலும் தரப்பட்டுள்ளன. 174 பரீட் சார்த்திகள் தலா 9 பாடங்கள் அடிப் படையில் 1566 பாட அலகுகளுக்கு தோற்றியிருக்க வேண்டும். சில பரீட்சார்த்திகள் சில பாட அலகுகளுக்கு தோற்றாததால் 1555 பாட அலகுகளுக்கு மாத்திரமே தோற்றியிருந்தனர். மொத்த 1555 பாட அலகுகளில் 176 பாட அலகில் (11.32 %) மாணவர்கள் சித்தி பெறவில்லை. மொத்த 1555 பாட அலகில் 1379 பாட அலகில் (88.66%) மாணவர்கள் சித்தி பெற்றிருக்கின்றார்கள். Aதரத்தில் கூடுதலான சித்தி பெற்றிருப்பது பாராட்டத்தக்கது. இது மீத்திறன் மாணவர்களை கூடுதலாக இருக்கும் நிலையைக் காட்டி நிற்கின்றது. சித்தி பெறத் தவறிய பாட அலகுகள் 176. இதில் ஆங்கிலத்தில் 176 பேரும் விஞ்ஞானத்தில் 35 பேரும் கணிதத்தில் 12 பேரும் சித்தி பெறத் தவறி விட்டனர். பொதுவாக கணிதத்திலும் பார்க்க விஞ்ஞானத்தில் கூடிய மாணவர்கள் சித்தி பெறத் தவறியிருப்பது யாழ்ப்பாணப் பாடசாலைகளில் காண முடிகின்றது.

அட்டவணைII

| தரம் | எண். |
|---|---|
| 9w | - |
| 8w | - |
| 7w | - |
| 6w | - |
| 5w | 02 |
| 4w | 08 |
| 3w | 08 |
| 2w | 18 |
| 1w | 74 |
| 0w | 64 |

அட்டவணை IV

| தரம் | எண். | விகிதம் |
|---|---|---|
| A | 439 | 28.23 |
| B | 300 | 19.29 |
| C | 355 | 22.83 |
| S | 285 | 18.33 |
| W | 176 | 11.32 |
| | 1555 | 100 |

பாடரீதியாக அடைவுகளை நோக்குமிடத்து சமய பாடங்களுக்குத் தோற்றிய 174 மாணவர்களும் 100% சித்தியை பெற்றுள்ளனர். இது 148 மாணவர்கள் (85%) Aசித்திபெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

இதேபோல் முயற்சியாண்மைக் கற்கை,சங்கீதம்,சித்திரம்,நடனம், ஆங்கில இலக்கியம், நாடகமும் அரங்கியலும், தகவல் தொடர்பாடலும் தொழில் நுட்பவியலும், கடற்தொழிலும் உணவுத்தொழில் நுட்பவியலும், மனைப் பொருளியல், சுகாதாரமும் உடற் கல்வியும் ஆகிய பாடங்களில் 100% சித்தி பெற்றிருப்பது பாராட்டுக்குரியது. தமிழ், கணிதம்,வணிகக் கல்வி, குடியுரிமைக் கல்வி,தமிழ் இலக்கியம், விவசாயம் ஆகிய பாடங்களில் பெறுபேறு 90வீதத்திற்கு மேற்பட்டிருப்பது திருப் திகரமாக இருக்கின்றன. விஞ்ஞான ஆங்கில பாட பெறுபேறுகள் திருப்தி கரமாக இல்லை. விஞ்ஞானத்தில் 79.8% மாணவர்களே சித்தி பெற்று 20வீத மாணவர்கள் சித்திபெறாததுடன் 11 மாணவர்களே Aசித்தி பெற்றிருப்பது திருப்தி தருவதாக இல்லை.

ஆங்கில பாட விகிதம் மிகக் குறைவாக இருப்பதும் விரும்பத்தக்கது அல்ல. மாணவர்களின் சமூக பொருளாதாரப் பின்புலம் ஆங்கில பாட கற்றலுக்கு சாதகம் இல்லாதிருப்பினும் பொருத்தமான கற்பித்தல்,கற்றல் முறை மூலம் அடைவுகளை உயர்த்த முடியும். ஆங்கில பாடத்தில் 7 மாணவர்கள் Aசித்தி பெற்றிருப்பதும் ஆங்கில இலக்கியம் எடுத்த 5மாணவர்களும் சித்தி பெற்று இருப்பதும் இப்பாடத்தை எடுத்த எடுத்தமாணவர்களுள் மூவர் Aசித்தி பெற்றிருப்பதும் மிகவும் பாராட்டுக்குரி யது. கட்டாய 6 பாடங்கள் பாடத் தொகுப்பு I, தொகுப்பு . II,தொகுப்புIII எனப் அட்டவணைIII



பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை
PhD.Durham
முன்னாள் துணைவேந்தர்

| பாடங்கள் | தோற்றியோர் | A | B | C | S | W | சித்தி | வீதம்% |
|---|---|---|---|---|---|---|---|---|
| சைவசமயம் | 164 | 142 | 16 | 05 | 01 | - | 164 | 100% |
| உரோ. கத்தோலிக்கம் | 06 | 04 | 01 | 01 | - | - | 06 | 100% |
| கிறிஸ்தவம் | 03 | 02 | 01 | - | - | - | 03 | 100% |
| தமிழ் | 173 | 38 | 71 | 49 | 12 | 03 | 170 | 98.3% |
| ஆங்கிலம் | 173 | 07 | 05 | 10 | 46 | 105 | 68 | 39.3% |
| கணிதம் | 171 | 42 | 15 | 48 | 54 | 12 | 159 | 93% |
| வரலாறு | 173 | 64 | 34 | 48 | 24 | 03 | 170 | 98.3% |
| விஞ்ஞானம் | 173 | 11 | 16 | 39 | 72 | 35 | 138 | 79.8% |
| பாடத் தொகுப்பு I | | | | | | | | |
| வணிகக்கல்வி | 44 | 12 | 07 | 18 | 06 | 01 | 43 | 97.7% |
| புவியியல் | 66 | 02 | 12 | 28 | 17 | 07 | 59 | 89.4% |
| குடியுரிமைக்கல்வி | 53 | 07 | 18 | 10 | 06 | 02 | 51 | 96.2% |
| முயற்சியாண்மை | 09 | - | - | 05 | 04 | - | 09 | 100% |
| பாடத் தொகுப்பு II | | | | | | | | |
| சங்கீதம் (கர்நாடகம்) | 20 | 05 | 04 | 06 | 05 | - | 20 | 100% |
| சித்திரம் | 11 | 01 | - | 03 | 07 | - | 11 | 100% |
| நடனம் (பரதநாட்டியம்) | 14 | 06 | 03 | 04 | 01 | - | 14 | 100% |
| ஆங்கில இலக்கியம் | 05 | 03 | - | - | 02 | - | 05 | 100% |
| நாடகமும் அரங்கியலும் | 88 | 12 | 50 | 24 | 02 | - | 88 | 100% |
| தமிழ் இலக்கியம் | 35 | 16 | 03 | 11 | 03 | 02 | 33 | 94.3% |
| பாடத் தொகுப்பு III | | | | | | | | |
| தகவல் தொழில்நுட்பம் | 20 | 10 | 10 | 08 | - | - | 20 | 100% |
| மீன்பிடி கை.தொ.நு. | 04 | 02 | 02 | 02 | - | - | 04 | 100% |
| மனை விஞ்ஞானம் | 10 | - | - | 03 | 06 | 01 | 09 | 90% |
| சுகாதார/உடற்கல்வி | 83 | 23 | 23 | 13 | 06 | - | 83 | 100% |
| விவசாயம் | 57 | 09 | 09 | 20 | 11 | 05 | 52 | 91.2% |
| | 1555 | 439 | 300 | 355 | 285 | 176 | 1379 | |

பிரித்து அடைவுகளை நோக்கும் இடத்து கட்டாயப்பாடங்களில் ஆங்கிலம், விஞ்ஞானப்பாடப் பெறுபேறுகள் உயர்த்தப் படவேண்டும். முதலாம் பாடத் தொகுதியில் 4 பாடங்களில் 162 மாணவர்கள் சித்தி பெற்றிருக்கின்றார்கள். சராசரி சித்தி விகிதம் 94.2 ஆக இருக்கின்றது. இரண்டாம் பாடத் தொகுதியில் 6 பாடங்களில் மாணவர் கள் பரீட்சைக்குத் தோற்றி 172 பேர் சித்தி பெற்று இருக்கின்றார்கள். இத் தொகுப்பில் சராசரி சித்தி விகிதம் 98. 84 %மாக இருக்கின்றது. பாடத்தொகுப்பு IIIஇல் 5 பாடங்களுக்கு மாணவர்கள் பரீட்சைக்குத்தோற்றி 168 பேர் சித்தி பெற்றிருக்கின்றார்கள். சித்தி விகிதம் 96.6 வீதமாக இருக்கின்றது.9 பாடங்களின் சித்தி விகிதத்தை நோக்கின் சமயம் 100%, தமிழ்98. 3%, ஆங்கிலம் 39.3%, விஞ்ஞானம் 79.8%, கணி தம் 93.0% , வரலாறு 98.3%,முதலாம் பாடத்தொகுதி 94.2%,இரண்டாம் பாடத்தொகுதி 98. 8%,மூன்றாம் பாடத்தொகுதி 96.5ஆக இருக்கின்றன. இவற்றுள் ஆங்கிலமும் விஞ்ஞானமும் குறைவாக இருப்பது கவனிக்கத் தக்கது. மேலும் சமயம் தவிர்ந்த ஏனைய 5 கட்டாய பாடங்களில் ஆங்கிலம் தவிர சித்தி விகிதம் உயர்வாக இருப்பினும் உயர் பெறுபேறுகள் குறைவாக இருப்பதை காணமுடிகின்றது. வரும் ஆண்டுகளில் உயர் பெறுபேறுகளை மாணவர்கள் பெற ஊக்குவிக்க வேண்டும். சாவகச்சேரி இந்துக் கல்லூரி கலாத் துக்குக் காலம் இப்பிரதேசத்தில் நிகழும் அனர்த்தங்களாலும் அதன் பின் விளைவுகளாலும் பாதிக்கப்பட்டு வருவதால் கல்லூரி சிறுகச் சிறுக எடுக்கும் முயற்சிகள் உரிய பலனை இழப்பதுடன் தேடிய பாடசாலை வளங்களையும் இழந்து வருகின்றது. எனினும் இடர் காலங்களில் துன்புற்று வந்த மக்களுக்கு அடைக்கலம் கொடுத்த பெருமையையும் மன நிறைவையும் கல்லூரி பெற்றுள்ளது. கல்லூரி கல்விப் பணியுடன் சமூக சமுதாயப் பணிக ளையும் சிறப்பாக நிறைவேற்றி வரு கின்றது.

இன்றைய அதிபர் திரு கைலாய பிள்ளை அறிவும் ஆற்றலும் மிக்கவர் மாணவர் நேயமிக்கவர்,பிரதேச அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என்ற ஆவல் கொண்டவர். இவரது காலத்தில் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மேலும் சிறப்பு நிலை எய்தும் கல்லூரிக்கு இவரது காலத்தில் சாவ கச்சேரி இந்துக்கல்லூரி மேலும் சிறப்பு நிலை எய்தும். கல்லூரிக்கு நல்ல விளையாட்டு மைதானம் இல்லை என்பது பெரும் குறைபாடாகும். இக்கல்லூரிக்கு அல்லது சாவகச்சேரி நகரப்பாடசாலைகளுக்காவது பொதுவாக தரமான ஒரு மைதானம் சாவகச்சேரி நகரப் பகுதியில் அமைக்கப்பட்டால் தான் விளையாட்டுத்துறையை மேம்படுத்த முடியும். தென்மராட்சி மாணவர்கள் விளையாட்டுத்துறையில் முக்கிய இடத்தை பெற முடியும். சரியான முறையில் கல்லூரி சமூகத்தை அணி திரட்டி அபிவிருத்திப்பணிகளை முன்னெடுப்பின் மிகக் குறுகிய காலத்தில் இக்கல்லூரி பல்வேறு துறைகளில் தேசியமட்டத்தில் பிரகாசிக்க முடியும். இதற்கான உள்ளார்ந்த வளங்களை இக்கல்லூரி கொண்டுள்ளது. நல்ல தூரநோக்கு, சிறப்பான பணி, தெளிவான இலக்குகள்,பொருத்தமான தந்திரோபாயங்கள், சிறப்பான வழி நடத்தும்கோட்பாடுகள் இலக்குகளை அடைய முடியும். இந்நேரத்தில் மனம் தளராது கல்லூரி சமூகம் இணைந்து செயற்பட்டால் குறுகிய காலத்தில் பெரிய கல்விச்சாதனைகள் நிகழும் இடமாக இக் கல்லூரி மிளிரும்.

# பத்திரிகைச் சுதந்திரம்

## ஜனநாயகத்தின் செம்மைக்கு ஊடகமே உதவுகரம்

**01**

பத்திரிகையின் பெருமையினைப் பாடப் புகுந்த பாரதிதாசன், 'ஊரினை நாட்டை இந்த உலகினை ஒன்று சேர்க்க' வல்லது அது வென்றார். அறிவைத் தேடிப்பரப்புவது, உலகச் செய்திகளையும் கருத்துக்களையும் திரட்டி வழங்குவது, மனஇருளை அகற்றுவது, துயில்வோர் கண்ணில் எழுச்சியாய் அமைவது, களைப்பினில் ஊக்கம் அளிப்பது, மக்கள் எண்ணத்தைச் செழிப்புறச் செய்வது, குறுகிய செயல்கள் தீர்த்துக் குவ லயம் ஓங்கச் செய்வது என்று பலவாறாகப் பத்திரிகையின் சிறப்புக்களைப் பாரதிதாசன் விரித்தார். அவர் கூறுபவற்றைக் கூர்ந்து நோக்குமிடத்து, ஒரு பத்திரிகையின் ஆற்றலையும் அதனால் ஆற்றக்கூடிய அரும்பணி களையும் அறிந்து கொள்ள இயலும். அதே நேரத்தில், வலுமிக்க ஒரு சாதனத்தைக் கையாளுபவர்களுக்கு இன்றியமையாத சமுதாயப் பொறுப்புணர்வையும் மனங் கொள்ளாதிருத்தல் சாலாது.

ஜனநாயகத்தின் செம்மையான செயற்பாட்டுக்குப் பத்திரிகை முதலான தொடர்பு சாதனங்கள் முக்கியமாக வேண்டப்படுபவை. பத்திரிகையின் முதலாவது கடமை தகவல் தருவதும் கல்வியூட்டுவதும் என்பர். துல்லியமாகவும் பக்கச்சார்பின்றியும் நேரகாலத் தோடும் தேவைப்படும் தகவல்களையும் அறிவினையும் பெற்றுக்கொள்ளும் மக்களால்தான் ஒரு ஜனநாயகம் செம்மையாகச் செயற்படுவதற்கு உகந்த முடிவுகளை எடுக்க முடியும். "ஜனநாயக அமைப்பில் சுதந்திரமும் சமத்துவமும் காணப்பட வேண்டுமாயின், அனைத்து மக்களும் கூடிய அளவுக்கு அரசாங்கத்தில் பங்கு பெறல் வேண்டும்" என்று கிரேக்க சிந்தனையாளரான அரிஸ்ரோட்டில் கூறினார். மக்களை ஒருமுகப்படுத்தவும், அவர்கள் மத்தியில் அறியாமையை அகற்றி அறிவினைப் பரப்பவும், பயனுள்ளவகையில் அவர்களை அரசாங்கத்தில் பங்குபெற வைக்கவும் பத்திரிகையால் முடியலாம்.

ஆனால், அதிகார வர்க்கத்தினரதும் ஊன்றிய நலன்களினதும் ஆளுகையிலுள்ள பத்திரிகைகள் பொதுமக்கள் நலன்களைப் பேணி அவர்களை ஆட்சியில் பங்கு பற்ற வைப்பதில் அதிக அக்கறை காட்டுமென நம்ப லாமா? இன்று பத்திரிகைச் சுதந்திரம் பற்றியும் பத்திரிகையாளர் உரிமைகள் குறித் தும் மிகுதியாகப் பெரும் பத்திரிகைகளில் பேசப்படுகிறது. ஆனால், சுதந்திரத்தையும் உரிமையையும் பற்றிப் பலவீனமானவர்களும் சுரண்டப்படுபவர்களும் ஒதுக்கப்பட்டவர்களும் உரிமை மறுக்கப்பட்டவர்களும் அங்கலாய்ப் பதற்கும் அதிகாரபலமும் பணபலமும் மிக்கவர்கள் குரல்கொடுப்பதற்கும் இடையில் நிறைய வேறுபாடு உண்டு.

ஒரு நூற்றாண்டுக்கு முன் கைத்தொழிற் புரட்சிக்குப் பிந்திய இங்கிலாந்தில் ஜனநாயகத்தின் முன்னோடிகளான மத்தியதரவர்க்கத்தினர் பத்திரிகைச் சுதந்திரத்தை வலியுறுத்தியபோது, பரந்த வாக்குரிமை யையும் தேர்தல் மூலமான ஆட்சி முறையினையும் நிலமானிய அதிகாரக் குலைப்பையுமே அவர்கள் கருத்திற் கொண் டனர். இலாபத்தை முதற் குறியாகக் கொண்டதொரு வியாபாரமாகப் பத்திரிகைத்துறை வளர்ச்சியடையுமென்று அவர்கள் எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். மனிதகுல முன்னேற்றத்துக்கோ விடுதலைக்கோ அனுகூலமான முறையில் மக்கள் அபிப்பிராயத்தை உருவாக்க வேண் டப்படும் சுதந்திரமும் சுயலாபத்துக்கோ அதிகாரவேட்டைக்கோ வேண்டப்படும் சுதந்திரமும் ஒன்றாகுமா?

இந்தியப் பிரதமர் ஜவகர்லால் நேரு 1963 பெப்ரவரியில் இந்தியப் பத்திரிகை நிறுவக ஆதரவில்நடந்த ஒரு கருத்தரங்கில் பேசுகையில்,

சுதந்திரம் முதலானவற்றில் பணபலம் தலையிடுவதால் ஏற்படக்கூடிய விளைவுகளைக் குறித்து விசனம் தெரிவித்தார். பணபலமிக்கவர்கள் தங்கள் கருத்துக்களையன்றி அவற்றுக்குமாறான வேறு கருத்துக்கள் வெளியிடப்படாதவாறு பார்த்துக் கொள்வார்கள் என்றும் குறிப்பிட்டார். ஒருவருடைய அபிப்பிராயம் பொதுமக்களுடைய பரந்த அபிப்பிராயம் எனத் தோற்றத்தக்கவாறு வெளியிடப்படுவதும் ஊன்றிய நலனுடையோரின் ஓர் உபாயமாகும். (தொடரும்)


பேராசிரியர் சி. தில்லைநாதன்
பேராதனைப் பல்கலைக்கழகம்

## முகாம்களிலுள்ள மக்களைப் பார்க்க அனுமதிக்குமாறு அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இணைந்து கோரிக்கை

(கொழும்பு)

வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் முகாம்களில் தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களை நேரில் சந்தித்து, அவர்களின் தேவைகளை அறிந்துகொள்வதற்கு அனுமதிக்க வேண்டுமெனத் தமிழ்க் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளன.

திம்புக்கோட்பாட்டுக்குப் பின்னர் இலங்கையிலுள்ள தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து முதற்தடவையாகக் கோரிக்கையொன்றை விடுத்துள்ளன. கடந்த மாத இறுதிப் பகுதியில் கூடிய அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் இந்த விடயம் குறித்துக் கலந்துரையாடி இணக்கப்பாடடொன்றுக்கு வந்ததுடன் அனைத்துக் கட்சிகளும் கைச்சாத்திட்ட கோரிக்கையடங்கிய கடிதம் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது. (ஓ-6)



வலி. கிழக்கு தென்பகுதி ப.நோ. கூ.சங்க எல்லைக்குட்பட்ட கிளைகள் மற்றும் பொது இடங்களில் மரம் நாட்டும் விழா அண்மையில் நிலையத் தலைவர் நா. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சங்கப் பொது முகாமையாளர் க. சிவலிங்கம் மரக்கன்றினை நாட்டுவதையும். அருகில் நெறியாளர் குழு உறுப்பினர் க.தர்மலிங்கம், உப தலைவர் ந. கணேசலிங்கம், பணியாளர்கள் நிற்பதையும் படங்களில் காணலாம். (படம் : நீர்வேலி செய்தியாளர்)



சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தில் உலக புத்தக தின நிகழ்வுகள் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட தென்மராட்சி கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் இ. சர்வேஸ்வரன் புத்தகக் கண்காட்சியினை பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.



இழந்த மரங்களை மீட்கும் நடவடிக்கையாக கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா ஐக்கிய நாணய சங்க வளாகத்தில் சங்கத்தின் பொருளாளர் சு. குகநாதன் மரக்கன்றினை நாட்டி வைப்பதையும் தலைவர் பி. சின்னத்துரை உட்பட அங்கத்தவர்களையும் படத்தில் காணலாம்.

BOC
இலங்கை வங்கி

தேசத்தின் வங்கியாக

70 ஆண்டுகள்



இலங்கை வங்கியின் இணையற்ற சேவையின் தொடராக

யாழ். மாவட்ட மக்களுக்கு மேலும் இரு புதிய சேவைகள் ஆரம்பமாகின்றன

**இலங்கை வங்கி வரவேற்பு கருமபீடம்**

பஸ் நிலையம் முன்பாக ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

காலம்- 06.05.2009 (புதன்கிழமை)
நேரம்- காலை-9.30 மணி

ஆரம்பித்துவைப்பவர்-திரு.ந. சிவரட்ணம்
(உதவிப் பொது முகாமையாளர், இலங்கை வங்கி)

**தன்னியக்க பணப்பரிமாற்று இயந்திரம் (ATM)**

யாழ். போதனா வைத்தியசாலை வளாகம்
நேரம் - காலை 11.00 மணி

ஆரம்பித்து வைப்பவர்-வைத்திய கலாநிதி ஏ.தேவநேசன்
(பணிப்பாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்,


மேற்படி இரு நிகழ்வுகளிலும் கலந்துகொண்டு சிறப்பிப்பதுடன் இவ்விரு சேவைகளின் மூலமும் பயன்பெறுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரதான முகாமையாளரும்
ஊழியர்களும்,
இலங்கைவங்கி - யாழ்ப்பாணம்.

. சி/2445

# இலங்கை வங்கியும் வலம்புரியும் இணைந்து நடத்திய 2008 உயர்தர பரீட்சையில் "3A, 2AB" சித்தி பெற்ற யாழ்.கல்வி வலய மாணவர்களின் கௌரவிப்பு நிகழ்வு -26.04.2009

## கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்










## சென் ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை







# கலைத்துறைப் பாடங்களை கற்க மாணவர்கள் முன்வர வேண்டும்

பிரதம ஆசிரியர்,
வலம்புரி,

சென்ற வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்ட (01.05.2009) வலம்புரி இதழில் யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபரும், சிறந்த கல்விமானுமாகிய திரு அ.பஞ்சலிங்கம் அவர்களது கடிதம் ஒன்றினை, "விஞ்ஞானத்துறை மாணவர்களை அதிகரிப்பது இன்றைய கட்டாய தேவை" என மகுடமிட்டுப் பிரசுரித்தீர்கள்.

யாழ்ப்பாணத்தில் மிகக் குறைந்தளவு மாணவர்களே கணிதத்திலும் உயிரியல் விஞ்ஞானத்திலும் சித்தியடைந்துள்ளனர் என்று திரு. அ. பஞ்சலிங்கம் வேதனைப்பட்டுள்ளார்.

அது மட்டுமன்றி சிறிதளவு விஞ்ஞான அறிவு கூட மாணவர்களுக்குப் பெரும் பயனளிக்குமென்றும் எழுதியுள்ளார். அவருடைய கவலை நியாயமானதே. அதுமட்டுமன்றி யாழ். கல்வி வலயத்தில், தனியார் கல்வி நிலையங்கள் குறைந்த செலவில் உயர்ந்த விஞ்ஞானக் கல்வியை வழங்குகின்றதென்பதும் மறுக்க முடியாத உண்மையாகும்.

ரூபா 900/ கொடுத்துப் பெறும் விஞ்ஞானக் கல்வியைப் பெற்றுக் கொள்வதற்கு, அபிவிருத்தியடைந்த நாடுகளில் ரூபா 20,000/= செலவழிக்கப்படுவது கண்கூடு. இது நமது மாணவர்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம்.இதற்காக நாம் கலைத்துறையை வேண்டாம் என்று ஒதுக்கி விடலாமா? ஆற்றல் குறைந்த மாணவர்கள் பலர், பெற்றோரின் நப்பாசையினால் உயிரியல் விஞ்ஞானம் கற்க முனைந்து மூன்று F எடுத்து தமது கல்வியை முடித்துக் கொள்கின்றனர். யாழ் வலயத்தில் உள்ள பிரபல பாடசாலைகளில் எத்தனை மாணவர்கள் கணிதம், விஞ்ஞானம் என்பனவற்றைக் கற்கத் தொடங்குகின்றனர். அவர்களில் மூன்று F எடுப்பவர்கள் எத்தனை வீதம் என்று நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்!

அவர்களில் சிலராவது வரலாறு, பொருளியல், அரசறிவியல், ஆங்கிலம் என்பன வற்றைக் கற்றிருந்தால் எங்கேயோ போயிருப்பர்! கலைத்துறையில் "சற் ஸ்கோர்" கூடுதலாகப் பெறக் கூடிய பாடங்களை தமிழ் மாணவர்கள் கற்றுத்தெளிந்தால் நாட்டுக்கும் தமக்கும் பெருந்தொண்டு செய்பவராவர்.

இன்று தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளுக்கு நம்மிடையே சமூக விஞ்ஞானிகள் இல்லாதிருப்பது ஒரு முக்கிய காரணமாகும்.(Lack of Social Scientists) பல வருடங்களாக தலை சிறந்த சிங்கள மாணவர்கள் சமூக விஞ்ஞானத்திற்குத் தம்மை அர்ப்பணித்துள்ளனர். நமது தலைவர்கள், உயிரியல் விஞ்ஞானிகளாகவும், வைத்தியர்களாகவும், வழக்கறிஞர்களாகவுமே இருந்திருக்கின்றனர். இவர்களால் சிங்கள அரசியல் சிந்தனைகளை சரியாக மதிப்பீடு செய்யமுடியவில்லை. சிங்களத் தலைவர்கள் தமது அரசியல் அறிவினாலும் சமூகவியற் பார்வையினாலும் நம்மைக் கபளீகரம் செய்து விட்டனர்.

அண்ணல் காந்தி, மூளைக்கு மட்டுமன்றி கரங்களுக்கும், உள்ளத்திற்கும் கல்விய ளியுங்கள் என்றார். உள்ளத்திற்கு கல்வியளிக்க சரித்திரம், வாழ்க்கை வரலாறு, கவிதை என்பன மிக அவசியம். இதனாலேதான் இந்தியப் பல்கலைக்கழகங்கள் விஞ்ஞானமாணி (B.SC) பட்டதாரிகள் ஆங்கில இலக்கியம் போன்ற ஒரு கலைத்துறைசார் நெறியையும் கற்க வேண்டுமென விதித்துள்ளன.

கலை இணைந்து கொள்ளாத விஞ்ஞானப் பாடங்களினால், வளம் படுத்தப்படாத உள்ளங்களினால் நாட்டுக்கோ, தனி மனிதனுக்கோ அதிக பயன் விளைவிக்க முடியாது. மாணவன் பள்ளிப்பருவத்தில் கல்வித் துறையில் பல அம்சங்களைத் தொட்டுப் பார்க்க வேண்டும் அத்தகைய கல்வியே மனத்தை விசாலமாக்கும்.

எனவே நல்ல மாணவர்கள் கலைத் துறைக்கு வரட்டும் நாடும் சமுதாயமும் அதனால் மேன்மையுறும்.

கலாநிதி எஸ். ஜெபநேசன்(MA , B.D Ph.D)
முன்னாள் யாழ். கல்லூரி அதிபர்,
முன்னாள் பேராயர்,
தென்னிந்திய திருச்சபை.

# வவுனியா வந்துள்ள வன்னி மக்களுக்கு 30 லொறிகளில் மருந்துகள் அனுப்பி வைப்பு

(கொழும்பு)

வவுனியாவுக்கு வந்துள்ள மக்களின் மருத்துவ தேவைகளுக்காக கடந்த மார்ச் மாதம் 20 ஆம் திகதி முதல் இது வரை 30 லொறிகளில் மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் மருந்து விநியோக பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் சரத் வீரபண்டார தெரிவித்தார்.

வன்னியில் இருந்து வந்துள்ள மக்களுக்காக நேற்று முன்தினமும் 3 லொறிகளில் மருந்து வகைகள், சத்திர சிகிச்சை உபகரணங்கள் என்பன அனுப்பி வைக்கப்பட்டன.

இதேவேளை புதுமாத்தளன் பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களுக்கு கப்பல் மூலம் மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்படவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்தது.

பாதுகாப்பு வலயத்தில் உள்ள மக்களுக்கு தேவையான மருந்து வகைகள் தொடர்பாக மாகாண சுகாதார சேவைப்பணிப்பாளர் அமைச்சிற்கு அறிவித்திருந்தார்.

இதன்படி கப்பல் மூலம் புது மாத்தளனுக்கு மருந்து வகைகள் அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளோம்.

கொழும்பிலிருந்து திருகோணமலைக்கு எடுத்துச் செல்லப்படும் மருந்துகள் கப்பல் மூலம் புதுமாத்தளனுக்கு அனுப்பப்படும எனவும் அவர் கூறினார். புது மாத்தளனுக்கு கடந்த மாதத்தில் இரண்டு தடவைகள் மருந்து வகைகள் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ஓ-6)



பிரபல பொருளியல் ஆசிரியர் வே. கருணாகரனின் பொன்விழா நிகழ்வுகள் அண்மையில் யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. விழா நாயகரையும் பாரியாரையும் கல்லூரி மாணவர்கள் மாலை அணிவித்து விழா மண்டபத்திற்கு வரவேற்பதை முதலாவது படத்திலும், பொன்னாடை போர்த்தி கல்லூரி ஆசிரியர் கழகம் சார்பாக நினைவுச் சின்னத்தினை வழங்கும் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி மற்றும் கல்லூரி அதிபர் வி. மாணிக்கம் ஆகியோரை இரண்டாவது படத்திலும், பதிலுரையாற்றும் விழா நாயகரை மூன்றாவது படத்திலும் காணலாம்.

# இடம் பெயர்ந்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி தேவை

## சர்வதேச சமூகத்திடம் இலங்கை அரசு கோரிக்கை

(கொழும்பு)

வடபகுதியில் இடம்பெயர்ந்திருக்கும் 2 இலட்சத்துக்கும் அதிகமான மக்களுக்கான போசாக்கு, சுகாதாரம் உள்ளிட்ட அத்தியாவசிய மனித நேயத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு 50 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி தேவையென இலங்கை அரசாங்கம் சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பாக ஆராய்வதற்காக நேற்று முன்தினம் திங்கட்கிழமை ஐ.நா. முகவர் நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்கும் நாடுகளின் பிரதிநிதிகள் கூடியிருந்தனர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட மனித உரிமைகள் அமைச்சர் மஹிந்த சமரசிங்க இக்கோரிக்கையை முன் வைத்தார்.

இலங்கையின் வடபகுதியிலிருந்து இடம் பெயர்ந்து வவுனியா, மன்னார் மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் அமைந்துள்ள முகாம்களில் தங்கியிருக்கும் 2 இலட்சத்திற்கும் அதிகமான மக்களுக்கு நன்மை ஏற்படும் நோக்கிலேயே இந்த உதவித் தொகையைக் கோருவதாக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தக் கோரிக்கைக்கு உதவி வழங்கும் சமூகத்திடமிருந்து சாதகமான பதில் கிடைக்குமென எதிர்பார்ப்பதாக மனித உரிமைகள் அமைச்சின் பேச்சாளர் தெரிவித்தார். அரசாங்கத்தால் தயாரிக்கப்பட்டிருக்கும் வேலைத்திட்டத்துக்கு அமையவே இந்த நிதியுதவிகள் இடம்பெயர்ந்த மக்களுக்குப் பயன்படுத்தப்படும் என அவர் கூறினார்.

இதேவேளை, வவுனியா மாவட்டத்தில் இடம்பெயர்ந்த ஒரு இலட்சத்து 70 ஆயிரம் பேர் 24 நிலையங்களில் தங்கவைக்கப்பட்டிருப்பதாகவும் அவர்களுக்கு சமைத்த உணவுகள் உட்பட ஏனைய வசதிகள் செய்து கொடுக்கப்பட்டிருப்பதாகவும் வவுனியா அரசாங்க அதிபர் பி. எஸ்.எம்.சார்ள்ஸ் தெரிவித்தார்.

இடம்பெயர்ந்த மக்களுக்கான நீர் விநியோகம் மற்றும் சுகாதார வசதிகளில் கூடுதல் கவனம் செலுத்தவேண்டிய தேவை இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மக்களுக்கு மேலதிகமான ஆடைகள் தேவைப்படுவதாக தெரிவித்துள்ள அவர் நான்கு மாதிரிக் கிராமங்களில் மக்கள் தங்கவைக்கப்பட்டுள்ளதாகவும் இதனைவிட மேலதிகமாக இரண்டு கிராமங்களை அமைக்குமாறு நான் யுனிசெப் அமைப்பிடம் கோரிக்கை விடுத்துள்ளதாகவும் தெரிவித்தார்.

(ஓ-6)

## இடம் பெயர்ந்த மக்களின் தேவைகளுக்காக ஜப்பான் 4 மில் அமெரிக்க டொலர் உதவி

வன்னியில் இருந்து இடம் பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களில் தங்கியுள்ள மக்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கென ஜப்பான் அரசாங்கம் 4 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையிலுள்ள ஜப்பான் தூதரகம் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றில் இத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதே வேளை 6 ஆயிரத்து 255 மெற்றிக் தொன் அரிசி மற்றும் 132 தொன் தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் என்பனவும் இம் மாதம் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படும் எனவும் ஐ. நாவின் உலக உணவுத் திட்டத்தின் ஊடாக இவை இடம் பெயர்ந்த மக்களுக்கு விநியோகிக்கப்படும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது (ஓ-4)

# மோதல் பகுதிக்கு எடுத்துச் செல்லும் உணவுப் பொருட்களை சேமிப்பதில் பிரச்சினை

## ஐ.சி.ஆர்.சி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மோதல் பகுதிக்கு போதுமான உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டதாக உலக உணவுத் திட்டம் தெரிவித்துள்ளது.

கடந்த பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் மாதம் 20 திகதி வரை 30 ஆயிரம் மெற்றிக் தொன்களுக்கு மேற்பட்ட உணவுப் பொருட்கள் மோதல் அற்ற பகுதிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக உலக உணவுத் திட்டத்தின் இலங்கைக்கான துணை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

அந்த பகுதிக்கு உணவை எடுத்துச் செல்வதில் தாங்கள் சில சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். அங்கு எடுத்துச்செல்லப்படும் பொருட்களை சேமித்து வைப்பதில் பிரச்சினைகள் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளதாகவும் தற்போது சிறிய கப்பல்களில் எடுத்துச் செல்லப்படும் உணவுப் பொருட்கள் நடுக் கடலில் சிறிய மீன்பிடிப் படகுகளில் மாற்றப்பட்டு கடற்கரைப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு தேவையான மக்களுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் இரவு 30 மெற்றிக் தொன் அளவு உணவுப் பொருட்கள் அப்பகுதிக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக தெரிவித்த அவர் தமது களஞ்சியத்தில் வட பகுதிக்கு மக்களுக்கு வழங்குவதற்கு தேவையான உணவுப் பொருட்கள் கையிருப்பில் உள்ளதாகவும் தெரிவித்தார். (ஓ-4)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

### வெந்தயக்கீரை

Botanical Name - Trigonella foenum - graecum
Family - Leguminosae
Engl - Fenugreek
Sing - Ulukal

இது சுமார் 1,2 அடி உயரம் வரைக்கும் வளரும். கிளைகள் செடியின் அடிப்பாகத்திலிருந்து தோன்றும். செடி முழுதும் மயிர் போன்ற சிறு சுணைகள் உண்டு. வெண்ணிறப் பூக்கள் இலையின் அடியில் 2,3 தோன்றும். ஐந்து வாரங்களில் பூக்க ஆரம்பிக்கும். பின் 15 நாட்களில் செடி காய்க்க ஆரம்பிக்கும். காய் 5,7 செ. மீ .நீளமுள்ளது.

### பரம்பலும், இனவிருத்தியும்

யாழ். மாவட்டத்தில் ஒரு சில விவசாயிகள் இதனைப் பயிரிட்டு வளர்க்கிறார்கள். கரிசல் மற்றும் வண்டல் நிலங்களில் இது நன்கு வளரும். விதைகள் மூலம் இனவிருத்தி செய்யப்படும். விதைத்த 30 நாட்களின் பின் கீரையை முதல் அறுவடை செய்யலாம். இதை ஊடு பயிராகவும் பயிரடலாம். மரங்களுக்கடியில் இதை விளைவிப்பதால் மரங்களுக்கு வேண்டிய நைதரசன் உரத்தை பாதுகாத்துக் கொள்கிறது. அதனால் பழமரங்கள் செழித்து நல்ல அறுவடையைக் கொடுக்கும்.

### 100 கிராம் வெந்தயக் கீரையி லுள்ள சத்துக்கள்

புரதம் 4.4 கிராம், கொழுப்பு 0.9 கிராம், நார்ப்பொருள் 1.1 கிராம், காபோவைதரேற்று 6.0 கிராம், கல்சியம் 395 மி.கி, பொஸ்பரஸ் 51 மி.கி, இரும்பு 16.5 மி.கி, விற்றமின் 'C' 52 மி.கி, மக்னீசியம் 67 மி.கி, விற்றமின் 'A' 2340 மைக்ரோகிராம், பொட்டாசியம் 31 மி.கி.

### மருத்துவப் பயன்கள்.

◆ வெந்தயக் கீரையை பருப்புடன் சேர்த்து கடைந்துண்ண செரித்தல் செம்மைப்படும்.

◆ வேகவைத்த கீரையை தேன்விட்டு கடைந்துண்ண குடல்புண் குணமாகும்.

◆ வேகவைத்த வெந்தயக் கீரையை வெண்ணெயில் வதக்கி உண்ண பித்தக் கிறுகிறுப்பு, தலைச்சுற்றல், பசியின்மை, வறட்டிருமல் நீங்கும்.

◆ வெந்தயக் கீரையை பருப்பு சேர்த்து கடைந்து, நெய்விட்டுக் கிளறி சோற்றில் சேர்த்துண்ண தொண்டைப்புண், வாய்ப் புண் குணமடையும்.



◆ ஆரம்ப நிலையிலுள்ள நீரிழிவு நோய்க்கு வெந்தயக் கீரைச்சாறு உகந்தது.

◆ 40கிராம் வெந்தயக் கீரையை 80 கிராம் முளைக்கீரையோடு சேர்த்து கூட்டு தயாரித்துண்ண கண்பார்வை தெளிவு பெறும், மலச்சிக்கல், மூலநோய் வாய்த் துர்நாற்றம் தீரும்.

◆ இக்கீரையோடு தேங்காய்ப்பால் சிறிதளவு, கோழி முட்டை சேர்த்து குருமா தயாரித்து நெய்யில் தாளித்து சோற்றுடன் சேர்த்து சாப்பிட சுவையாக இருப்பதோடு, இடுப்பு வலி, நாரிப் பிடிப்பு முதலியன நீங்கி இடுப்பு பலம் பெறும். தாதுவைக் கெட்டிப்படுத்தும்.

◆ வெந்தயக் கீரையோடு சீமைப்புளி, அத்திப்பழம், திராட்சை மூன்றையும் சேர்த்து குடிநீர் தயாரித்து தேவையானளவு தேன் சேர்த்து குடித்து வந்தால் தலைச்சுற்றல், உள் அழல், வறட்டிருமல், மூலநோய், குடல்புண் குணமாகும்.

◆ தலையிலுள்ள பொடுகு நீங்க இக்கீரையைப் பசைபோல் அரைத்துத் தலையில் தடவி ஒரு மணி நேரம் வைத்திருந்து குளிக்க வேண்டும்.

◆ வெந்தயக் கீரையை மை போல அரைத்து, சூடுசெய்து வீக்கங்கள் மீது பூச வீக்கம் கரையும்.

◆ வெந்தயக் கீரையை சுத்தம் செய்து வதக்கி அதனுடன் கசகசா, வாதுமைப் பருப்பு ஆகியவற்றைப் பாலில் அரைத்து கலக்கி காய்ச்சி அதனுடன் நெய்யும் சேர்த்து உண்டு வர உடல் உறுதிபெற்று மூட்டுக்களைப் பலப்படுத்தும்.

டாக்டர் திருமதி விவியன் சத்தியசீலன் (M.D.C.S)
சிரேஷ்டவிரிவுரையாளர், சித்த மருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம், கைதடி

◆ வெந்தயக் கீரையை கடைந்து வாரத்திற்கு 3,4 நாட்கள் சாப்பிட்டுவர தோல் சம்பந்தமான படை, சொறி, சிரங்கு முதலிய நோய்கள் குணமாகும். இது கல்லீரலையும், மண்ணீரலையும் பலப்படுத்தக்கூடிய கீரையாகும். ■■■

# பணவீக்கம் 2.9வீதமாக குறைவடைந்துள்ளது

நாட்டின் தற்போதைய பணவீக்கம் 2.9 வீதமாக வீழ்ச்சியடைந்துள்ளதாக நுகர்வோர் விவகார அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில், நாட்டின் பொருளாதார நிலைமை தற்போது சீரடைந்து வருகின்றது. உலக பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் இலங்கையின் பொருளாதார நிலைமைகள் சீரடைந்து வருகின்றன.

கடந்த வருடம் 28 வீதமாக இருந்த பணவீக்கம் இவ்வருடம் ஏப்ரல் மாதத்தில் 2.9 வீதமாக குறைவடைந்துள்ளது. இது ஆரோக்கியமான விடயமாகும். உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை குறைவடைந்தமை மற்றும் அரசாங்கத்தின் திறமையான பொருளாதார கொள்கைகள் என்பனவே இதற்கான காரணங்களாகும். எரிவாயுவின் விலையானது இரண்டு மாதத்துக்கு ஒரு முறை மேற்கொள்ளப்படும் அதிகரிப்புக்கு அமையவே இடம் பெற்றுள்ளது என்றார். (ஓ-6)

சுவர்களைக் கட்டாதீர்கள்; பாலங்களைக் கட்டுங்கள்.

-கன்ஃபூஷியஸ்

வலம்புரி

# உலகம் முழுவதும் இலங்கைக்குப் பயமா?

யுத்த நிறுத்தத்தை ஏற்படுத்துமாறு உலக நாடுகள் விடுத்த அத்தனை கோரிக்கைகளும் இலங்கை அரசால் அடியோடு நிராகரிக்கப்பட்டு விட்டது.

யுத்தத்தை நிறுத்துமாறு சர்வதேச சமூகம் கோரிக்கை விடுத்திருந்தும் இலங்கை அரசு அதனை ஏற்றுக் கொள்ளாததுடன், யுத்தத்தை நிறுத்துமாறு கோரிக்கை விடுத்த நாடுகளைத் தவறாக விமர்சிப்பதிலும் ஈடுபட்டுள்ளது.

நிலைமை இதுவாக இருக்கும்போது இலங்கை விடயத்தில் ஐ.நாவும் தோல்வி கண்டுவிட்டதென்றே கூறவேண்டும்.

வன்னியில் சிக்குண்ட மக்களைப் பாதுகாப்பது, அவர்களை நேரில் சென்று பார்ப்பது, சர்வதேச கண்காணிப்புக் குழுவை அமைப்பது என்ற சகல விடயங்களிலும் இலங்கை அரசிடம் ஐ.நா. தோற்றுப்போனது.

உலக நாடுகளினதும், ஐ.நா. சபையினதும் இந்தத் தோல்வியானது சாதாரணமானதல்ல.

இலங்கையில் யுத்தத்தின் பிடிக்குள் சிக்குண்டு உயிரைக் காப்பாற்ற இயலாமல் தவிக்கும் தமிழ் மக்களுக்கு உதவ முடியாமல் போனமை, சர்வதேசத்தின் மனித நேயம் மற்றும் சிறுபான்மை மக்களைக் காப்பாற்றும் கொள்கை என்பவற்றுக்கு ஏற்பட்ட தோல்வி என்றே கூற வேண்டும்.

அதேநேரம் இலங்கையில் சிறுபான்மைத் தமிழ் மக்களைக் காப்பாற்ற முடியாமல் போனதிலிருந்து உலகிலுள்ள அனைத்துச் சிறுபான்மை மக்களினதும் உரிமை-பாதுகாப்பு என்பன கேள்விக்குறியாகியுள்ளது.

மேலும் இலங்கையில் அப்பாவித் தமிழ் மக்களை சர்வதேச சமூகத்தால் காப்பாற்ற முடியாமல் போனமைக்கான காரணம் என்ன? இலங்கை அரசின் அதட்டலுக்கு அந்த நாடுகள் பயந்துபோய்விட்டனவா? அல்லது இலங்கையில் நடக்கும் யுத்தத்திற்குத் தேவையான ஆயுதங்கள், போர்த்தளபாடங்கள், இராணுவப் பயிற்சிகள் என்பவற்றையெல்லாம் வழங்கிய நாடுகள் எந்த முகத்தோடு யுத்தத்தை நிறுத்துமாறு கேட்க முடியுமென்ற இலங்கை அரசின் இறுமாப்பா?

ஈராக் மீது தாக்குதல் நடத்திய அமெரிக்கா, பாகிஸ்தானுக்குள் புகுந்து வங்காளதேசத்தை மீட்ட இந்தியா, இலங்கையைத் தனது பூரண கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்ததுடன் போகும் காலத்தில் ஈழத்தமிழரின் தலையில் மண்ணைக் கொட்டிவிட்டுச் சென்ற பிரிட்டன் என்ற பட்டியலுக்குள் இருக்கும் நாடுகள் எல்லாம் இலங்கை அரசுக்குப் பயந்துவிட்டனவா? என்ன?

# அவதார தெய்வத்தை அர்ப்பணித்த அன்னை ஈஸ்வரம்மா



இவ்வுலகில் மனிதனை நல் வழி நடத்த, சத்யத்தை போதிக்க, தர்மத்தைக் காக்க அவதரித்த தெய்வம் பகவான் சாயியை ஈன்றழித்த தெய்வத்தாய் ஈஸ்வரம்மாவின் தினம் இன்றாகும். ஒவ்வொருவருடமும் மே 06 ஆம் திகதி உலகம் பூராவும் உள்ள சாயி நிலையங்கள் மிகவும் சிறப்பாக கொண்டாடுகிறார்கள்.

ஈஸ்வரம்மா மிகவும் பொருத்தமான பெயர். உலகத்தைக்

## இன்று தெய்வத்தாய் ஈஸ்வரம்மா தினம்

காத்தருளும் ஈஸ்வரனை உலகுக்களித்த அன்னை என்பதால் ஈஸ்வரம்மா என இறைவனே இட்ட பெயரெனலாம்.

மனித நெறிமுறை தவறி மனிதன் நடக்கும் போது அடுத்த ஜீவனுக்கு பாதகமே விளையும். இவ்விளைவின் பெருக்கம் தாக்கம் காணும் வேளை நல்லோர், பெரியோர், நலிவுற்றோர்களால் முன் வைக்கப்படும் இறைஞ்சல்களுக்கு இரங்கி இறைவனே மனித வடிவெடுத்து இப் பூமியில் அவதரிக்கின்றார். இவ்வவதரிப்பின் ஆரம்பத்தை ஒரு தெய்வத் தாய்க்கே கொடுக்கின்றார். அவ்வாறு அவதரித்த தெய்வம் பகவான் பாபா. ஈஸ்வரம்மாவின் திருவயிற்றையே தனதாக்குகின்றார். அதன்படி தனது தெய்வீக கருவறையில் தெய்வத்தை வளர்த்து இப் பூமிக்கு அளிக்கின்றார் அன்னை ஈஸ்வரம்மா.

இன்றைய காலம் தலை, கால் புரியாதா காலம். பிள்ளைகள், தாய், தந்தையின் சொற்படி நடப்பதில்லை. மதிப்பதில்லை. பெற்றோர் மீது பிள்ளைகளுக்கு அன்பில்லை. இவைகளுக்கு சில காரணிகளும் முதன்மை வகிக்கின்றதெனலாம். பணம் எம்மிடத்தில் முன்னிலை வகிப்பதனால் குணம் அற்றுப் போய் விட்டது. போட்டி ,பொறாமை, சுயநலம் விளையும் பூமியாக மனித மனம் இருக்கின் றது. சகோதர ஒற்றுமை இல்லை. பாலூட்டி , சீராட்டி வளர்த்த பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு பெரும் பொறுப் பென நினைத்து முதியோர் இல்லங்களில் வாடிவதங்குகின்றனர். இன்று அவரைச் சார்ந்தது. நாளை என்னைச் சாரும்.

இந்த வகைத் தவறுகளை உணர்த்தவே , பகவான் தன்னை இவ்வுலகுக்களித்த அன்னை ஈஸ்வரம் மாவை இத் தினத்தில் நினைவு கூருகிறார்.

சாயித் தெய்வம் மனித வடி வெடுத்து நடமாடுபவராய் இருந்தாலும் பகவானுக்கு பந்த பாசமென்று ஒன்றில்லை. தாய், தந்தையரைப் பற்றிக் கேட்டால் இவை மாயை என்பார். இருந்தும் மனித நல்வழி காட்டலுக்காக, தான் ஒரு வழி காட்டியாக இருக்க வேண்டுமென்பதற்காக தாயின் அன்பு , ஆசி எத்தகையது என்பதைக் காட்டவே பகவான் இத் தினத்தை அனுஷ் டித்து பூசிக்கின்றார். பகவானே அருளுகின்றார்! அன்னையும் பிதா வும் முன்னறி தெய்வம் இதனை எடுத்துக் காட்டவே தாய், தந் தையரின் சமாதிக்குச் சென்று வருகின்றேன் என்கின்றார். நாமும் தெய்வத்தை எமக்களித்த தெய்வத்தாய் ஈஸ்வரம்மாவின் அடியினை வணங்கி உய்வோமாக.

யாதவன்

ஜெய் சாயிராம்.

# இடம்பெயர்ந்த முதியோர்கள் 58 பேர் சமளங்குளம் முதியோர் இல்லத்தில் பராமரிப்பு

(கொழும்பு)

இடம்பெயர்ந்து வந்து வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக் கப்பட்டிருந்த 58பேர் சமளங்குளம் அரசினர் பாடசாலையில் இயங்கத் தொடங்கியுள்ள வவுனியா கோவில்குளம் அருள் மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலயத்தின் முதியோர் இல்லத்தில் ஒப் படைக் கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இங்கு மொத்தமாக 66 பேர் அனுப்பி வைக்கப்பட்டதாகவும் அவர்களில் 6 பேர் வயோதிபம் காரணமாக மரணமடைந்ததாகவும் இருவர் உறவினர்களின் வேண்டுகோளுக்கமைய அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் எஞ்சிய 58 பேர் இந்த முதியோர் இல்லத்தில் தற்போது பராமரிக்கப்பட்டு வருவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இவர்களில் சிலருக்கு உறவினர்கள் எவரும் இல்லையென்றும் பலர் தாமாக இயங்க முடியாதவர்களாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கோவில்குளம் அருள்மிகு அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் ஆலய அறங்காவலர் அவையினர் இவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் உணவையும் வழங்கி பராமரித்து வருகின்றார்கள். இந்த ஆலயத்தின் தொண்டர்கள் இவர்களைப் பராமரிக்கும் பணியில் முழுமையாக ஈடுபட்டிருப்பதாகவும் தெரிவிக் கப்படுகின்றது.

இந்த முதியோர் இல்லத்திற்கு எம்.எஸ். எப்.மற்றும் இன்ரநஷனல் ஹண்டிகப்ட் எனப்படும் வலுவிழந்தோருக்கான சர்வதேச நிறுவனம் ஆகியன தேவையான மெத்தைகள், சக்கர வண்டிகள் போன்றவற்றை வழங்கி உதவியுள்ளன.இந்த இல்லத்திற்குத் தேவையான குடிநீர் வசதியை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு ஒக்ஸ்பாம் நிறுவனம் முன் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஓ-6)

# இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு மனிதநேயப் பணியாளர்கள் அனுமதிக்கப்பட வேண்டும்

## ஜப்பானியத் தூதுவர் யசூசி அகாசி

(கொழும்பு)



இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் முகாம்களுக்கு சர்வதேச அமைப்புக்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் சென்றுவருவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதிக்க வேண்டுமென ஜப்பான் கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூசி அகாசி இந்தக் கோரிக்கையை முன் வைத்தார். புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் நலன்புரி நிலையங்களின் நிலைமை தரமானதாக இல்லா விட்டாலும் அரசாங்கம் தன்னால் முடிந்ததைச் செய்து வருகிறது என்றார் அவர்.

நான் முகாம்களிலுள்ள இடம்பெயர்ந்த மக்கள் பலருடன் கலந்துரையாடியிருந்தேன்.

குடும்பங்கள் பிரிக்கப்பட்டமை குறித்தே பெரும்பாலான மக்கள் தமது கவலைகளை வெளியிட்டிருந்தனர். அவர்களின் இந்தக் கவலையை ஜனாதிபதி மற்றும் அதிகாரிகளுடன் கலந்துரையாடும்போது எடுத்துக் கூறியிருந்தேன்.

இந்த விடயம் குறித்துத் தாம் ஏற்கனவே அறிந்து கொண்டிருப்பதாகவும் பிரிந்தகுடும்ப உறுப்பினர்களை மீண்டும் இணைப்பதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என அவர்கள் உறுதியளித்தனர் என்றார் யசூசி அகாசி.

இதேவேளை ரோக்கியோ உதவி வழங்கும் இணைத் தலைமை நாடுகளுக்கிடையே போர் நிறுத்தம் தொடர்பான வேறு பட்டகருத்துக்கள் இருப்பதாகவும் அவர் கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் குறிப்பிட்டார். (6)

# ஜெர்மனியில் தொடரும் உண்ணாவிரதப் போராட்டம்

ஜேர்மனி டுசில்டோவ் பாராளுமன்றம் முன்பாக இடம் பெற்று வரும் உண்ணா விரதப் போராட்டம் கடந்த திங்கட் கிழமை இரண்டு நாளாகவும் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.



உடனடிப் போர் நிறுத்தம் , வன்னி மக்களுக்கான உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களை அனுப்பி வைக்க வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை முன் வைத்தே இவர்கள் உண்ணா விரதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இவ் இளைஞர்களுக்கு ஆதரவாக பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் என உண்ணா விரதப் போராட்டம் நடைபெறும் திடலில் ஒன்று கூடித் தமது ஆதரவைத் தெரிவித்து வருகின்றனர்.

(ஓ-4)

# சுவாமி விவேகானந்தரின் ஆளுமை வளர்ச்சி தொண்டு



சிவ பெருமானுக்குப் பணி செய்ய விரும்புவன் அப் பெருமானின் மக்களுக்குப் பணி செய்ய வேண்டும்- முதலில் இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் பணி செய்ய வேண்டும். இறைவனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்பவர்கள் அவருக்கு உத்தமத் தொண்டர்களாவார் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. தன்னலம் இன்மையே சமய வாழ்க்கைக்கு உரைகல். இந்த தன்னலமின்மை நிறைந்தவன், சிவ பெருமானை மிக நெருங்குகிறான். ஒருவன் தன்னலம் கருதுபவனாயிருந்தால் அவன் பல கோயில்களைத் தரிசித்திருந்தாலும் புண்ணியத்தலங்கள் பல கண்டவனாயிருந்தாலும் சிறுத்தையின் உருவத்தைத் தன் மீது வரைந்து வைத்திருந்தாலும், இன் னும் சிவபெருமானுக்கு வெகு தொலைவில் இருப்பவனே.

# போரில் புலிகள் தோல்வியடைந்தாலும் கொரில்லா வடிவில் மீண்டும் போராடுவார்கள்

## கேர்ணல் ஹரிஹரன் தெரிவிப்பு



(புதுடில்லி)

இலங்கையில் தற்போதுள்ள சூழ்நிலைக்கு இலங்கை இராணுவமும் புலிகளும் தான் காரணம் என் கிறார் இந்திய அமைதிப் படையின் உளவுப் பிரிவு தலைவராக இலங் கையில் பணியாற்றிய கேணல் ஹரிஹரன். ஓர் ஆங்கில இணையதளத்துக்கு அவர் அளித்த பேட்டியில் கூறியதாவது,

கடந்த ஆறு மாதங்களில் நடந்த போரில், மன்னார் பகுதியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக மக்கள் திரட்டப்பட்டு புலிகள் இருக்கும் பகுதியை நோக்கி அனுப்பப்பட்டார்கள். கிளிநொச்சி வீழ்ந்த பிறகு இராணுவத்தின் கைகளில் சிக்குவதை விட இராணுவத்தினருக்கு பதிலடி கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையில் புலிகள் பக்கமே சென்று விடலாம் என்று மக்கள் நினைத்தார்கள்.

தற்போதைய போர் பாதுகாப்பு பகுதிக்கு இதனாலேயே பொதுமக்கள் வந்தடைந்தனர். பொதுமக்களில் பலர் புலிகளின் உறவினர்களாகவும் ஆதர வாளர்களாகவும் உள்ளனர். பாலம் கட்டுதல், மருத்துவ உதவி, உணவு வழங்கல் உள்ளிட்ட பணிகளுக்கு இராணு வம் பொதுமக்களை பயன்படுத்துவது உண்டு. அதுபோல் புலிகளும் பொதுமக்களை நிர்வாக நடவடிக்கைக ளுக்கு பயன் படுத்துகிறார்கள்.

ஆகவே விடுதலைப் புலிகளின் போரில் பொதுமக்களுக்கும் பங்கு உண்டு. போர் நிறுத்தப்பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ள முல்லைத்தீவுப் பகுதிதான் பொதுமக்களை புலிகளிடமிருந்து பிரித்து கட்டுப்பாட்டுடன் வெளியேற்ற சரியான இடம் என்று இலங்கை கருதுகிறது.

தீபகற்பம் போல் காட்சி அளிக்கும் இப்பகுதியில் கடல் மார்க்கம் உட்பட மூன்று பக்கமும் மக்களை வெளியேற்றலாம். இந்த நெருக்கடியான இடத்தில் இராணுவமும் புலிகளும் தங்களுடைய உயிருக்காக போரிடுவதில் இடையில் பொதுமக்கள் சிக்கி மடிவதை தடுக்க முடியாது.

பயங்கரவாதத்தை ஒழிக்க இந்தியா பெரிய ஆயுதங்களை பயன்படுத்துவதில்லை. ஆனால் அமெரிக்கா பயன்படுத்துகிறது. அதையே இலங்கையும் பின்பற்றுகிறது.

ஆனால் மகிந்த ராஜபக்ஷ தற்போதே போரை முடித்துவிட வேண்டும் என்று நினைக்கிறார். ஆகவே பயங்கரவாதத்துக்கு எதிரான போரில் நம்முடன் இலங்கையை ஒப்பிட முடியாது. அங்கு மக்கள் படும் கஷ்டங்களைப் பார்த்து உலக நாடுகள் போரை நிறுத்த வேண்டும் என்று கூறுகின்றன.

புலிகளின் இருப்பிடத்துக்கு 6 கி.மீ, தொலைவில் இராணுவம் வந்து விட்டது என்பதால் விமான தாக்குதல்க ளுக் கும் பெரிய ஆயுதங்களை கொண்டு தாக்கவும் தேவையில்லை. என்றாலும் தொடர்ந்து இலங்கை போரை நடத்தி வருகிறது.

இந்திய அமைதிப்படை இலங்கை சென்று வந்த பின்னர், புலிகளால் முன்னாள் பிரதமர் ராஜிவ் கொல்லப்பட்டார். 2002 இல் நடந்த அமைதி முயற்சியில் இந்தியா பங்கேற்க விரும்பவில்லை.

அப்போது புலிகளும் வலிமையானவர்களாக இருந்ததால் தமிழக அரசியல்வாதிகளும் அதைப்பற்றி கண்டு கொள்ளவில்லை. ராஜபக்ஷ பதவியேற்றபின் அமைதி நடவடிக்கைகளுக்கு இந்தியா பங்கேற்க வேண்டும் என்று அழைப்பு விடுத்தார். அதற்கு இந்தியா ஒப்புக் கொள்ளவில்லை.

இப்போது இலங்கை பிரச்சினைக்காக குரல் கொடுக்கும் தமிழக அரசியல்வாதிகளுக்கும் அதில் பங்குண்டு. இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை தமிழர்களின் சம உரிமைக்கான போராட்டம் வேறு. புலிகளுக்கெதிரான போராட்டம் என்பது வேறு.

தற்போது போரில் புலிகள் தோல்வி அடைந்துவிட்டால் கூட, இன்னும் 6 மாதத்தில் கொரில்லா வடிவில் மீண்டும் யுத்தத்தை தொடங்கு வார்கள். இவ்வாறு ஹரிஹரன் தெரிவித்துள்ளார். (ஓ-6)

# சோனியா மிரட்டலால் உண்ணாவிரதம் வாபஸ் தஞ்சையில் வைகோ பேச்சு

(தஞ்சாவூர்)

சோனியா மிரட்டலால், கருணாநிதி உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார் என்று தஞ்சை பொதுக்கூட்டத்தில் வைகோ தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ம.தி.மு.க வேட்பாளர் துரை பாலகிருஷ்ணனை ஆதரித்து நடந்த பிரசாரப் பொதுக் கூட்டத்தில் பேசிய ம.தி.மு.க பொதுச் செயலர் வைகோ தெரிவித்ததாவது,

பிரதமர் சோனியா கொடுக்கும் நம்பிக்கையால் தான் இந்தியா் வந்த ராஜபக்ஷ இலங்கை இராணுவ தளபதி, அதிகாரிகள் என பலரும் போர் நிறுத்தமில்லை என தைரியமாக பேட்டி கொடுக்கின்றனர்.

தன் மீது பழி வரக்கூடாது என்பதற்காக உண்ணாவிரதம், உடல் நலமில்லை என கருணாநிதி நடிக்கிறார். உண்ணாவிரதம் இருந்து என்னை குற்றவாளி ஆக்காதீர்கள். என்று சோனியா, கருணாநிதியை மிரட்டியதும் உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். இதுதான் உண்மை நிலை என்றார். (ஓ-6)

# இலங்கையின் நிலையற்ற தன்மை இந்தியாவில் தாக்கத்தை ஏற்படுத்தும்

## பிரதமர் மன்மோகன்சிங் தெரிவிப்பு

(சண்டிகார்)


இலங்கையில் நிலவும் நிலையற்ற தன்மை, இந்தியாவின் பாதுகாப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்துள்ளார்.

அரியானா மாநிலம் பெகோவாவில் நடந்த தேர்தல் பிரசார பொதுக்கூட்டத்தில் அவர் கலந்துகொண்டு பேசியதாவது,

தீவிரவாதத்துக்கு எதிராக, தாங்கள் தான் உறுதியான, வலிமையான நடவடிக்கை எடுக்க முடியும் என்று பா. ஜனதாவினர் கூறுகிறார்கள். ஆனால் இவ்விடயத்தில் அவர்களின் சாதனை வேறுமாதிரி உள்ளது.

அவர்கள் ஆட்சியில்தான், இந்திய விமான கடத்தல் சம்பவத்தில், சிறையில் இருந்த 3 கொடிய தீவிர வாதிகளை விடுவித்தார்கள்.

அத்வானி உள்துறை மந்திரியாக இருந்த போது தான், பாராளுமன்றம், காஷ்மீர் சட்ட சபை, ஜம்மு ரகுநாதர் கோவில், குஜராத் அக்ஷர்தாம் கோவில், டெல்லி செங்கோட்டை ஆகியவற்றின் மீது தீவிரவாதிகள் தாக்குதல் நடத்தினர். கார்கிலில் ஊடுருவல் நடந்த போது, பா.ஜனதா அரசு தூங்கிக் கொண்டிருந்தது.



எனவே, பா.ஜனதா எத்தகைய வலிமையான, உறுதியான நடவடிக்கை எடுத்தது என்பதை ஒவ்வொருவரும் தெரிந்து கொள்ளலாம்.

தீவிரவாதத்தை ஒடுக்க காங்கிரசால்தான் உறுதியான நடவடிக்கை எடுக்க முடியும். மும்பை தாக்குதல் சம்பவத்தில் உறுதியான நடவடிக்கை எடுத்தோம்.

தற்போது, அண்டை நாடுகளான இலங்கை, பாகிஸ்தான், நேபாளம் ஆகியவற்றில் அமைதியின்மையும், நிலையற்ற தன்மையும் காணப்படுகின்றன.

இவை இந்தி யாவின் பாதுகாப்பிலும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதுபோன்ற சூழ்நிலையை காங்கிரசால் மட்டும்தான் திறமையாக கையாள முடியும். அதற்கான அனுபவம் எங்களக்குத்தான் உள்ளது இவ்வாறு மன்மோகன் சிங் தெரிவித்தார். (ஓ-6)

# மாணவர்கள் சாகும்வரை உண்ணாவிரத போராட்டம்

(புதுக்கோட்டை)

மத்திய அமைச்சர் ப.சிதம்பரத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்ததற்காக கைது செய்யப்பட்ட 3 மாணவர்கள், புதுக்கோட்டை சிறையில் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளனர்.

முத்துக்குமார் மக்கள் எழுச்சி இயக்கம் என்ற அமைப்பின் சார்பில், 13 மாணவர்கள் சிவகங்கை தொகுதிக்குட்பட்ட ஆலங்குடி சந்தைப் பகுதியில் சமீபத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டிருந்தனர். ஈழத்தமிழர்களின் இன்னல்களுக்கு முக்கிய காரணமான ப. சிதம்பரத்திற்கு வாக்களிக்கக் கூடாது என்று கூறி அவர்கள் பிரசாரம் செய்து துண்டுப் பிரசுரங்களையும் விநியோகித்துள்ளனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொரிஸார் 13 மாணவர்களையும் கைதுசெய்து அவர்கள் மீது பிணையில் வெளி வரமுடியாத பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவு செய்தனர்.

இந்நிலையில், 13 பேரில் ஆசிப், முத்து கிருஷ்ணன், செந்தில் ஆகிய மூன்று மாணவர்கள் சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்துள்ளதாக முத்துக்குமார் எழுச்சி இயக்கத்தின் சார்பில் சிவகங்கை தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ராஜீவ் காந்தி தெரிவித்துள்ளார். (ஓ-6)

# நளினியை விடுதலை செய்யக் கோரி மீண்டும் நீதிமன்றில் மனு தாக்கல்

## சிறையில் சந்தித்து பேசிய சட்டத்தரணி பேட்டி

(வேலூர்)

நளினியை விடுதலை செய்யக்கோரி கோட்டில் மீண்டும் மனு தாக்கல் செய்யப்படும் என்று அவரது சட்டத்தரணி தெரிவித்தார்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினி வேலூர் பெண்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். 14 ஆண்டுகள் முடிந்துவிட்டதால் தன்னை விடுதலை செய்யும்படி நளினி உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த நிலைமயில் வேலூர் பெண்கள் ஜெயிலில் இருக்கும் நளினியை சந்திப்பதற்காக சென்னையைச் சேர்ந்த சட்டத்தரணிகள் துரைசாமி இளங்கோ ராஜ்குமார் ஆகியோர் நேற்று முன்தினம் காலை 11.40 மணிக்கு வேலூர் பெண்கள் சிறைக்கு வந்தனர். சிறை அதிகாரிகளிடம் அனுமதி பெற்று சிறையில் நளினியை சந்தித்துவிட்டு பகல் 1.10மணிக்கு வெளியே வந்தனர். பின்னர் சட்டத்தரணி துரைசாமி நிருபர்களுக்கு பேட்டியளித்தார். அப்போது அவர் கூறியதாவது,

நளினி தனக்கு விடுதலை கிடைக்காததால் வருத்தத்தில் உள்ளார். கடந்த 2008 ஆம் ஆண்டு செப்ரம்பர் மாதம் நளினியின் விடுதலை தொடர்பாக ஆலோசனைக்குழு அமைத்து அறிக்கை தாக்கல் செய்யும்படி தமிழக அரசுக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது. ஆனால் 8 மாத காலம் ஆகியும் இதுவரை ஆலோசனைக்குழு அமைக்கப்படவில்லை.

ஆலோசனைக்குழு அமைக்கவில்லை என்றால் தேர்தலுக்கு பிறகு ஜுன் மாதம் மீண்டும் நிதிமன்றில் மனுத்தாக்கல் செய் வோம்.

இந்த விவகாரத்தில் முதல்வர் எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொல்லியிருக்கிறார் மத்திய அரசுக்குத்தான் அதிகாரம் உள்ளது என்று கூறுவது தவறு சட்டப்படி தமிழக அரசுக்குத்தான் அதிகாரம் உள்ளது.

நளினி விரைவில் விடுதலை ஆவார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உள்ளது மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார். (ஓ-6)


# மரண அறிவித்தல்



**தம்பி முத்து அரிப்பிரசாதம் ஜே.பி**

**(விவாக -பிறப்பு- இறப்பு பதிவாளர்)**

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த தம்பி முத்து அரிப்பிரசாதம் 4.5.2009 திங்கட்கிழமை பி.ப1.30 மணியளவில் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் திருமதி அரிப்பிரசாதம் செல்வராணியின் அன்புக் கணவரும், தம்பிமுத்து (அமரர்) மலோகிமணியின் அன்பு மகனும், அமரர்களான தம்பையா வள்ளிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மருமகனும், உலாந்தா தம்பையா அவர்களின் பேரனும் ஆவார்.

வினோதினி (கனடா), நிறஞ்சினி (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும் சி. கஜேந்திரன் (கனடா), பா. பார்த்தீபன்(இத்தாலி) ஆகி யோரின் மாமனும், கவிசாந்தின் அன்புப் பேரனுமாவர்

அன்னாரின் ஈமைக் கிரிகைகள் இன்று 6.5.2009 காலை ,10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று வேரோண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு அன்பாக வேண்டுகிறோம்.

கரவெட்டிமத்தி,
கரவெட்டி.

சி/2446

**இங்ஙனம்**
**மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

# கிரேம் சிமித்-ஒஜா ஜோடி ரன் மழை;
# ராஜஸ்தான் றோயல்ஸ் அணி வெற்றி

## யுவராஜ் அணி பரிதாபம்



(டர்பன்)

சிமித்-ஒஜா ஜோடியின் அதிரடியான ஆரம்பத்தின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணியை வீழ்த்தியது.

இந்தியன்பிரிமியர்லீக் (ஐ.பி.எல்.) அமைப்பின் 8 அணிகள் மோதும் இரண்டாவது இருபது-20 தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெற்று வருகிறது.

இதில் நேற்று டர்பனில் நடைபெற்ற லீக் சுற்றின் 30ஆவது போட்டியில் வோர்ன் தலைமையிலான ராஜஸ்தான் றோயல்ஸ் அணியும் யுவராஜ் சிங் தலைமையிலான கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ராஜஸ்தான் றோயல்ஸ் அணிக்கு கிரேம் சிமித்-ஓஜா ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 14.5 ஓவர்களில் 135 ஓட்டங்களை அதிரடியாக எடுத்தது.

இதில் கிரேம் சிமித் 44 பந்துகளில் (12 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 77 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய யூசுப் பதான் 12 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

எனினும் 3ஆவது விக்கெட்டுக்காக ஓஜாவுடன் இணைந்த ஜடேஜா அதிரடியாகத் துடுப்பெடுத்தாடினார்.

மறுமுனையில் நாமன் ஓஜா 51 பந்துகளில் (5 பவுண்டரிகள், 5 சிக்ஸர்கள் அடங்கலாக) 68 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழக்க ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 17 ஓவர்களில் 164 ஓட்டங்களை எடுத்தது 3 ஆவது விக்கெட்டை இழந்தது.

தொடர்ந்து களமிறங்கிய கார்சல் அதிரடியாகத் துடுப்பெடுத்தாட ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 19 ஓவர்களில் 200 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் ஜடேஜா 12 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 33 ஓட்டங்களை எடுத்து ஆட்டம் இழந்தார்.

இந்நிலையில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுக்களை இழந்து 211 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் கார்சல் 16 ஓட்டங்களையும் ரயூட் ஒரு ஓட்டத்தையும் ஆட்டம் இழக்காமல் எடுத்தனர்.

பந்துவீச்சில் சாவ்லா 2 விக்கெட்டுக்களையும் பவார், இர்பான் பதான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 212 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி ஆரம்பத்திலேயே விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சோகல் பூச்சியத்துடனும் கோல் ஒரு ஓட்டத்துடனும் ஹட்டிச் 10 ஓட்டங்களுடனும் சங்கக்கார 11 ஓட்டங்களுடனும் மஹேல ஜெயவர்த்தனா 9 ஓட்டங்களுடனும் ஆட்டம் இழக்க கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 7.4 ஓவர்களில் 39 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 4 விக்கெட்டுக்களை இழந்தது.

எனினும் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த யுவராஜ் சிங்-இர்பான் பதான் ஜோடி அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி நம்பிக்கை அளித்தது.

இந்த ஜோடி 35 பந்துகளில் 48 ஓட்டங்களை இணைப்பாட்டமாக எடுத்த போது இர்பான் பதான் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்கள் சோபிக்காத நில்லயில் கிங்ஸ் லெவின் பஞ்ஜாப் அணி 20 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களை இழந்து 133 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 78 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்தது.

இதில் அணித்தலைவர் யுவராஜ் சிங் 37 பந்துகளில் (3 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 48 ஓட்டங்களை எடுத்தார்.

பந்துவீச்சில் அறிமுக வீரர் அமீற் சிங் 4 ஓவர்கள் பந்துவீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுக்களையும் அணித்தலைவர் ஷேன் வோர்ன் 2 விக்கெட்டுக்களையும் ஹார்வூட், யூசுப்பதான் மற்றும் திரிவேடி ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.


இவ் வெற்றியின் மூலம் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி தான் விளையாடிய 8ஆவது போட்டியில் 4 ஆவது வெற்றியைப் பெற்றது.

இதேவேளை கிங்ஸ் லெவின் பஞ்சாப் அணி தான் விளையாடிய 7ஆவது போட்டியில் சந்தித்த 4 ஆவது தோல்வி இதுவாகும்.

இப் போட்டியில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணியின் கிரேம் சிமித் ஆட்ட நாயகனாத் தெரிவானார்.

***200 ஓட்டங்கள்***

தற்போது நடைபெற்று வரும் 2ஆவது ஐ.பி.எல். இருபது-20 தொடரில் ராஜஸ்தான் றோயல்ஸ் அணி இப் போட்டியில் 20 ஓவர்களில் 211 ஓட்டங்களை குவித்தமையே அணி ஒன்று இன்னிங்ஸில் எடுத்த அதிகூடிய ஓட்ட எண்ணிக்கை ஆகும்.



## கொல்கத்தா அணியை வீழ்த்தியது டில்லி

காம்பீர்-டில்சான் ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டத்தின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

ஐ.பி.எல். தொடரில் நேற்று டர்பனில் நடைபெற்ற லீக் சுற்றின் 31ஆவது ஆட்டத்தில் சேவாக் தலைமையிலான டில்லி டேர் டேவில்ஸ் அணியும் மக்குலம் தலைமையிலான கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் டில்லி டேர் டேவில்ஸ் அணித் தலைவர் சேவாக் விளையாடாத நிலையில் காம்பீர் அணியை வழிநடத்தினார்.

இதில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை இழந்து 154 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வான் வைக் 48 பந்துகளில் (11 பவுண்டரிகள் அடங்கலாக) 74 ஓட்டங்களையும் அணித் தலைவர் மக்குலம் 29 பந்துகளில் (ஒரு பவுண்டரி, 3 சிக்ஸர்கள் அடங்கலாக) 35 ஓட்டங்களையும் ஹென்ரி குயூஸ் ஆட்டம் இழக்காமல் 24 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 30 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் சங்கவான் 2 விக்கெட்டுக்களையும் நெகரா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 155 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய டில்லி டேர் டேவில்ஸ் அணி காம்பீர்-டில்சான் ஜோடியின் அதிரடியான இணைப்பாட்டத்தின் மூலம் 19 ஓவர்களில் ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து 157 ஓட்டங்களை எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.


இதில் அணித்தலைவர் காம்பீர் 57 பந்துகளில் (7 பவுண்டரிகள் அடங்கலாக) 71 ஓட்டங்களையும் திலகரட்ண டில்சான் 34 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 42 ஓட்டங்களையும் ஆட்டம் இழக்காமல் எடுத்ததுடன் வோர்னர் 23 பந்துகளில் (5 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அடங்கலாக) 36 ஓட்டங்களையும் எடுத்து ஆட்டம் இழந்தார்.

பந்து வீச்சில் அகாக்கர் ஒரு விக்கெட்டை வீழ்த்தினார்.

இப் போட்டியில் டில்லி டேர் டேவில்ஸ் அணித்தலைவர் காம்பீர் ஆட்டநாயகனாகத் தெரிவானார்.

இவ் வெற்றியின் மூலம் டில்லி டேர் டேவில்ஸ் அணி தான் விளையாடிய 7ஆவது போட்டியில் 5 ஆவது வெற்றியைப் பெற்று 10 புள்ளிகளுடன் முதல் இடத்தைப் பிடித்தது.

இதேவேளை தனது 9ஆவது போட்டியில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி 7ஆவது தோல்வியைச் சந்தித்தது என்பது குறிப்பிடத்தக்கது.



யாழ்.பல்கலைக்கழக ஊடக வளங்கள் பயிற்சி நிலைய முழுநேர மாணவர்களினால் வெளியிடப்பட்ட 'நண்பர்கள்' விளையாட்டுச் சஞ்சிகை வெளியீட்டு விழாவில் பேராசிரியர் வி.பி.சிவநாதன் உரையாற்றுவதையும் , ஊடக வளங்கள் பயிற்சி நிலைய பணிப்பாளர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை சஞ்சிகையை வெளியிட்டு வைக்க யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி பதில் பணிப்பாளர் கே.கணேசநாதன் பெற்றுக் கொள்வதையும் இரண்டாவது பிரதியை கோட்டக்கல்வி அதிகாரி கணபதி பெற்றுக் கொள்வதையும் ஊடகவளங்கள் பயிற்சி நிலைய போதனாசிரியர் ம.ஜனகேஸ்வரன் ஆய்வுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

## பிரித்தானிய எம்.பிக்கள்...

கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

அரசாங்கம் மேற்கொண்டு வரும் மனிதாபிமான நடவடிக்கை மற்றும் வடக்கு நிலைமை தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்பன குறித்து ஜனாதிபதி, எம்.பிக்கள் குழுவுக்கு விளக்கமளித்துள்ளார்.

அத்துடன் அரசாங்கத்துக்கு எதிராக பல்வேறு தரப்புக்களாலும் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் மேற்கொள்ளப்படும் தவறான பிரசாரங்களை புறம்தள்ளி அரசாங்கம் மீட்கப்பட்ட மக்களுக்காக மேற்கொண்டு வரும் வேலைத்திட்டம் தொடர்பில் நேரில் சென்று பார்வையிடுமாறு ஜனாதிபதி எம்.பிக்கள் குழுவிடம் கோரிக்கை விடுத்தார்.

இந்த சந்திப்பில் வெளிவிவ்கார அமைச்சர் ரோகித போகொல்லாகம, மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க, ஜனாதிபதி ஆலோசகர் பசில் ராஜபக்ஷ, ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க, வெளியுறவு செயலாளர் பாலித கோஹன ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச் சந்திப்பையடுத்து பிரித்தானிய எம்.பிக்கள் குழு வவுனியா நலன்புரி நிலையங்களுக்கு விஜயம் செய்ததாக ஜனாதிபதியின் ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ச-5)

## வீடுகள் கையளிக்கும் நிகழ்வு

பருத்தித்துறை வியாபாரி மூலையில், சுனாமி வீடமைப்புத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட 20 வீடுகள் கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 9 மணிக்கு சர்வோதய யாழ். மாவட்ட இணைப்பாளர் ஏ.கே.சிவசுப்பரமணியம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு இலங்கை சர்வோதயத் தலைவர் ஏ.ரி.ஆரியரட்ண பிரதம விருந்தினராகவும் ,சிறப்பு விருந்தினராக யாழ்.அரச அதிபர் க.கணேஷும் கலந்து கொள்கின்றனர். (ச-3)

## ஜனாதிபதியுட...

குழுவின் தலைவரான இரா.சம்பந்தன் கருத்து வெளியிட்டுள்ளார். அவை வருமாறு,

வவுனியாவிலுள்ள இடம் பெயர்ந்த மக்கள் தொடர்பாக கடந்த வாரம் தமிழ்க் கட்சிகள் கூடி ஆராய்ந்தன.

நாம் வவுனியாவிலுள்ள முகாம்களுக்கு நேரடியாக விஜயம் மேற்கொண்டு அங்குள்ள நிலைமைகள் தொடர்பாக அறிந்து செயற்படுவதற்கான அரசாங்கத்தின் ஒத்துழைப்பை வழங்குமாறு ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பப்பட்டது. அதைத் தொடர்ந்தே ஜனாதிபதி இக்கூட்டத்தை கூட்டுவதாக அறிவித்துள்ளார்.

இந்த கூட்டத்தில் நாங்கள் பங்கு பற்றிக் கொள்ள வேண்டிய அவசியமில்லை என அவர் கூறினார். (ச-5,14)

## புத்தளவில்...

முற்பகல் 11.30 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது.

இச் சம்பவத்தையடுத்து குறிப்பிட்ட பகுதியைச் சுற்றிவளைத்த படையினரும் காவல் துறையினரும் கடும் தேடுதல் நடத்தியிருக்கின்றனர். (ச-5)

## பிரபாகரன் வெளியே...

முடியும். வீட்டிலிருப்பவர்களை ஐக்கியப்படுத்துவதே எமது தேவையாக இருக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

நாடாளுமன்றத்தில் நேற்று செவ்வாய்க் கிழமை நடைபெற்ற அவசர காலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீடிப்பதற்கான பிரேரணையை வைத்து உரையாற்றிய போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் தெரிவித்ததாவது, பயங்கரவாதிகளிடமிருந்து மக்களை மீட்டு அவர்களை பாதுகாப்பதற்கான வேலைத் திட்டங்கள் முடிபுக்கு வருகின்ற நிலையில் அம் மக்களுக்கு வசதிகளை செய்து கொடுத்து வடக்கிற்கு அபிவிருத்தியை கொண்டு செல்ல வேண்டும்.

வடக்கை அபிவிருத்தி செய்ய முடியும் என்பதில் வடக்கு-தெற்கு மக்கள் நம்பிக்கையுடன் இருக்கின்றனர். பலாத்காரமாக வைத்திருந்த மக்கள் அரசின் மர நிழலின் கீழ் வந்துள்ளனர். ஆயிரக்கணக்கில் இல்லை இலட்சக்கணக்கான மக்களை படையினர் மீட்டுள்ளனர்.

ஒரு யுத்தத்திற்கு முகம் கொடுத்துள்ள நிலையிலேயே இன்னொரு யுத்தத்திற்கு முடிபைக் கண்டுள்ளோம். பயங்கரவாதத்தை முடிபுக்கு கொண்டு வந்து வடக்கில் புலிகளிடம் சிக்கியுள்ள அப்பாவி மக்களை மீட்டெடுப்பதற்காக நாம் முன்னெடுத்த நடவடிக்கைகள் முடிபுக்கு வந்துள்ளன என்றார். (ச-5,14)

## ஆக்ரோஷ...

புலிகள் இயக்கம் தீவிரவாத இயக்கம்.

இலங்கையிலுள்ள தமிழர்கள் அப்பாவிப் பொதுமக்கள். அங்கு போர்ப் பகுதியில் இலங்கை அரசு மேற்கொள்ளும் ஆக்ரோஷமான நடவடிக்கையை நாங்கள் கடுமையாக எதிர்க்கிறோம். இங்கிருந்து எங்கள் அமைச்சர்களை அனுப்பினோம்.இலங்கை அரசுடன் பேசினோம் எங்களால் முடிந்தளவு முயற்சி செய்தோம்.

இன்னும் சொல்லப்போனால் அதில்வெற்றியும் பெற்றோம் என்றுதான் கூறவேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். (ச-14)

## 155 புள்ளிகளைப் பெறாதவர்...

கல்வி அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளது.

கல்வி அமைச்சு கடந்த வருடம் போட்டிப் பரீட்சை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றை நடத்தி இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்கு புதிதாக நியமனங்களை வழங்கியது.

எனினும் இந்நியமனம் கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கு புறம்பானது எனவும் அதனால் தாம் பாதிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டு சிலர் உயர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்தனர்.

இவ்வழக்கின் தீர்ப்பின் போதே உயர்நீதிமன்றம் கல்வி அமைச்சுக்கு மேற்கண்டவாறு அறிவுறுத்தியுள்ளது. மேலும் இத் தீர்ப்பில் உயர் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளதாவது,

இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்கு இணைத்துக் கொள்வதற்காக நடத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் வெட்டுப் புள்ளியை 155 ஆகக் கொண்டு நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டு நியமனம் வழங்கப்பட வேண்டும்.

எனவே மேற்படி நியமனத்திற்கான போட்டிப் பரீட்சையில் 155 புள்ளிகளுக்கு மேல் எடுத்தவர்கள் தமது புள்ளியை உறுதிப்படுத்தும் சத்தியக்கடதாசி அடங்கிய ஆவணங்களை கல்வி அமைச்சின் செயலாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

கல்வி அமைச்சின் செயலாளர் எதிர்வரும் இரு வாரங்களில் இந்த நியமனம் தொடர்பான மேலதிக விபரங்களை விளம்பரப்படுத்த வேண்டும்.

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்துக்கமைவாகவே நியமனம் செய்யப்பட வேண்டும் என்பதற்காக இத் தீர்ப்பு வழங்கப்படுகிறது என உயர் நீதிமன்றம் அறிவுறுத்தியுள்ளது.

இத் தீர்ப்பின் மூலம் மேற்படி போட்டிப் பரீட்சையில் 155 புள்ளிகளுக்கு குறைவாக எடுத்து இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளவர்களின் நியமனங்கள் இரத்துச்செய்யப்படும் வாய்ப்புள்ளதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்க இணைப்பாளர் சரவணபவன் தெரிவித்தார்.

இதேவேளை தம்மால் ஏற்கனவே இலங்கை அதிபர் சேவை தரம் 2-II இற்கு வழங்கப்பட்ட நியமனங்களில் மாற்றம் செய்யாமலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நியமனம் வழங்குவதற்கு ஆட்சேபனை இல்லை எனவும் கல்வி அமைச்சினால் தெரிவிக்கப்பட்ட கருத்தை உயர் நீதிமன்றம் நிராகரித்தது. (ச-5)

## திருஷிகா கொலைச்...

பகுதியைச் சேர்ந்த மகிந்ததாஸ் மயூரன் (வயது 24), எட்வேட் யூலியட் ஸ்டனிஸ்லோஸ் (வயது 20), ஏரன்ஸ் ஒழுங்கையைச் சேர்ந்த சம்பா எனப்படும் சோமசுந்தரம் அனுஷன் (வயது 19) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மாணவி கடத்தப்பட்டு முதலாவது சந்தேக நபருடைய வீட்டிலேயே தடுத்து வைக்கப்பட்டு பின்னர் தாக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளதாக சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது தெரியவருவதாகப் பொலிஸ் தகவல்கள் மூலம் அறியமுடிகிறது.

மாணவியின் பாடசாலை புத்தகப்பை மறைத்து வைக்கப்பட்டுள்ள இடத்தைக் காட்டித் தருவதாகக் கூறியதால் நேற்று நள்ளிரவு கல்வியங்காடு முஸ்லிம் மையவாடிப் பகுதிக்கு இம் மூவரும் பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்டனர்.

அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்களால் பொலிஸாரை தாக்க முற்பட்ட போது, பொலிஸார் மேற்கொண்ட பதில் தாக்குதலிலேயே இவர்கள் கொல்லப்பட்டதாகச் சம்பவம் தொடர்பான பொலிஸ் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் இடம்பெற்ற இடத்திலிருந்து ரி-56 ரக துப்பாக்கிகள்-02, அதற்கான மகசின்கள் -04 மற்றும் 5 கைக்குண்டுகள் ஆகியன கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இம்மாணவி ஏற்கனவே தனது பெற்றோருடன் பாரதி ஒழுங்கையில் வசித்துள்ளார். கடந்த 2007ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் தந்தை இனந்தெரியாத நபர்களினால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுக் காணாமல் போனதையடுத்தே மாணவி, தாய் மற்றும் தங்கை ஆகியோருடன் பூம்புகாரிலுள்ள பாட்டியின் வீட்டில் வசித்து வந்தனர்.

கொல்லப்பட்ட இருவர் பாரதி ஒழுங்கையைச் சேர்ந்தவர்கள் என்பதால் இம் மாணவியின் குடும்பத்துக்கு இவர்கள் நன்கு அறிமுகமானவர்கள் என்றும் தகவல்கள் மூலம் அறிய முடிகின்றது.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் சிலர் பொலிஸாரால் விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ள போதிலும் இவ் விசாரணை தொடர்பான தகவல்களை ஊடகங்களுக்குக் கூட தெரிவிப்பதனை தவிர்த்து வருகின்றனர். (ச-5)

## அவசரகாலச்...

பிரேரணையை பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சமர்ப்பித்தார்.

இதனையடுத்து விவாதம் தொடங்கியது. அரச தரப்பு மற்றும் எதிர்த்தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விவாதத்தில் உரையாற்றினர்.

சபாநாயகரிடம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு கேட்டுக்கொண்டதற்கு இணங்க பிற்பகல் 4.30 மணிக்கு பிரேரணை வாக்கெடுப்புக்கு விடப்பட்டது.

ஆதரவாக 88 வாக்குகளும் எதிராக 14 வாக்குகளும் பெறப்பட்டன.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மாத்திரமே எதிராக வாக்களித்தது. (ச-3,5,14)




### புதுக்கடைத் திறப்புவிழா அழைப்பு



(இடமாற்றம்)

அன்புடையீர்!

நிகழும் மங்கலகரமான விரோதி வருடம் சித்திரைத் திங்கள் 23-ம் நாள் (06.05.2009) புதன்கிழமை காலை 06.34 மணி முதல் 07.18 மணிவரையுள்ள சுபவேளையில்

### நிஷானந்தா ஜுவல்லறி

என்னும் எமது நிறுவனத்தினை இடம்மாற்றி ஆரம்பிக்க இறைவன் திருவருள் கைகூடியிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து சிறப்பித்து புதுக்கடை சிறப்புடன் விளங்க ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.06, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி.021 222 7985
(கபிலா பாட்டா அருகாமை)

இங்ஙனம் தங்கள் நல்வரவை
இனிதே விரும்பும்
திரு.A.ஆனந்தன்
(உரிமையாளர்)

(2703)


## மனிதாபிமான உதவிகள்...

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

தமிழர்களுக்கான உணவு மற்றும் மனிதாபிமான உதவிகளைத் திட்டமிட்ட முறையில் அரசாங்கம் தடுத்து வைத்திருப்பதால் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருக்கும் முல்லைத்தீவுப் பகுதியில் உள்ள தமிழர்களுக்காக நேரடியாகவே மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளை புலம்பெயர்ந்த தமிழர்கள் மேற்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த மனிதாபிமான உதவிகள் அவர்களுக்குக் கிடைக்கச் செய்வதற்கான நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்குமாறு அனைத்துலக சமூகத்தை தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கேட்டுக்கொள்கின்றது.

இந்த முயற்சியை செயற்படுத்துவதற்குத் தேவையான தார்மீக, அரசியல் மற்றும் தளவசதி ஆதரவை அனைத்துலக சமூகம் வழங்கும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

கடந்த சில நாட்களில் மட்டும் பட்டினியால் ஒன்பது பேர் மரணமடைந்திருப்பதுடன் இவ்வாறு மரணமடைபவர்களின் எண்ணிக்கை அடுத்துவரும் நாட்களில் பெருமளவுக்கு அதிகரிக்கப்படலாம் என்ற அச்சம் காணப்படுவதையும் உங்களுடைய கவனத்துக்குக் கொண்டு வருகின்றோம்.

இங்குள்ள ஒரு இலட்சத்து 65ஆயிரம் மக்கள் பட்டினிச் சாவை எதிர்கொள்ளும் நிலையில் புலம் பெயர்ந்த மக்களுடைய இந்த முயற்சி மிகவும் அவசரமானதாகவே இருக்கின்றது.

இங்குள்ள மக்களுக்கு உணவு மற்றும் மருந்துகள் போன்றவற்றை அனுப்பிவைக்குமாறு ஐ.நாவும் ஏனைய மனிதாபிமான அமைப்புக்களும் கோரிக்கை விடுத்துவரும் நிலையில் அந்தக் கோரிக்கையை நிராகரிப்பதுடன் அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்கள் அனைத்தையும் மீறும் வகையில் சிறீலங்கா அரசாங்கம் நடந்து கொள்கின்றது.

இப்பகுதியில் உள்ள மக்களுக்கு 2 ஆயிரத்து 474 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் தேவை என உலக உணவுத்திட்டம் மதிப்பிட்டிருந்த போதிலும், 2008 ஏப்ரல் 2 ஆம்நாள் 60 மெற்றிக் தொன் உணவுப் பொருட்கள் மட்டுமே அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கத்தினால் விநியோகிக்கப்பட்டது.

எறிகணை வீச்சுக்களாலும், குண்டு வீச்சுக்களாலும் அவதிப்படும் எமது மக்களின் நிலை திட்டமிட்ட முறையில் உணவு மற்றும் மருந்துப் பொருட்களைத் தடுத்து வைத்திருப்பதால் மேலும் மோசமாகியிருக்கின்றது.

புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடங்கியுள்ள இந்தப் பணிக்கு தார்மீக ஆதரவை வழங்க வேண்டிய பொறுப்பு ஐ.நாவுக்கும் அனைத்துலக சமூகத்திற்கும் இருக்கின்றது என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## வன்னி நிலைமைகள்...

சுழற்சி முறையிலான தலைமைப் பதவியைப் பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர் பாதுகாப்புச் சபையின் மே மாதத்துக்கான திட்டங்கள் தொடர்பாக விளக்கமளித்து ஊடகவியலாளர்களிடம் நேற்று முன்தினம் உரையாற்றிய போதே இந்தத் தகவல்களை அவர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை தொடர்பாக பாதுகாப்புச் சபையில் ஆராயப்படுவதை ரஷ்யா எதிர்க்கின்றதா என ஊடகவியலாளர்கள்கேள்வி எழுப்பிய போது பாதுகாப்புச் சபையில் அதிகார பூர்வ மற்ற முறையில் இலங்கை விவகாரம் தொடர்பாக ஆராயப்படுவதை சபை எதிர்க்கவில்லை.இதில் இலங்கைக்கான தூதுவரும் கலந்து கொள்ள வேண்டும் என விற்றாலி சுர்கின் பதிலளித்தார்.

இவ்வாறு அதிகாரபூர்வமற்ற முறையில் விவாதிக்கப்படுவதற்கான சாத்தியத்தை இலங்கைத் தூதுவரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றார் எனக் குறிப்பிட்ட விற்றாலி சுர்கின், அங்கு உருவாகியிருக்கும் தீவிரமான மனிதாபிமான பிரச்சினைதொடர்பாக தாம் கவனத்தைச் செலுத்தியிருக்கும் அதேவேளையில்,

இந்த நிலைமைகளைச் சமாளிப்பதில் இலங்கை அரசாங்கத்திற்கு அனைத்துலக சமூகம் தம்மால் முடிந்தளவு உதவிகளைச் செய்ய வேண்டும் எனத் தெரிவித்தார். (ச-5)


### மீண்டும் விற்பனைக்கு

தரமான கொங்கிறீற் கற்கள், வேலித் தூண்கள், அலங்காரத் தூண்கள், பூச்சாடிகள் மற்றும் அனைத்து வகையான கொங்கிறீற் உற்பத்திகளையும் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர்பு:-
17, ஐயனார் கோவில் வீதி,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.
(கெங்காதரன் வைத்தியசாலை அருகில்)
T.P. :-0771277113


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.05.2009இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.